விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

ராம்கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 06 செவ்வாய்க்கிழமை (20.06.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 183

## யாழ்.கல்விவலய பாடசாலைகள் காலை 8மணிக்கு ஆரம்பமாகும்

### கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகள் இன்று முதல் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 2 மணிவரை நடைபெறும் என கல்விப்பணிப்பாளர் செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக நேற்று முதல் இலங்கையில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் 7.30 மணிக்கு ஆரம்பமாகி 1.30 மணிக்கு நிறைவடையும்.

எனினும் அந் நடைமுறையை யாழ்ப்பாணத்தில் அமுல்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கல்கள் குறித்து கல்விப்பணிப்பாளர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இது குறித்து மாகாண கல்வி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டது. இதன் பயனாக யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட சகல பாடசாலைகளும் இன்று முதல் காலை 8மணிக்கு ஆரம்பமாகி 2 மணிக்கு நிறைவடையவுள்ளன. (ச-133)

## யப்பானிய உதவிகள் நிறுத்தம்?

(கொழும்பு)

இலங்கைக்கான அபிவிருத்தி உதவிகளை நிறுத்துவது தொடர்பாக யப்பான் பரிசீலித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் வன்முறைகள் அதிகரித்து ஒரு முழு அளவிலான யுத்தம் தொடங்கும் நிலை இருப்பதால் தனது உதவிகளை நிறுத்த யப்பான் முடிவு செய்திருப்பதாக கொழும்பில் உள்ள யப்பான் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பில் உத்தியோகபூர்வமற்ற முறையில் இலங்கை அரசாங்கத்திற்கு யப்பான் தெரிவித்திருப்பதாகவும் யப்பான் தனது உதவிகளை நிறுத்தினால் ஐக்கிய நாடுகள் சபையின் உதவியும் நிறுத்தப்படக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

தமிழ் மக்களின் சட்டபூர்வமான முறைமைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவேண்டுமென்று டோக்கியோ இணைத் தலைமைநாடுகள் வலியுறுத்தியிருந்தன. ஆனால் அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

மேலும் துணை இராணுவக்குழுவினருக்கும் அரசாங்கப்படைகளுக்கும் தொடர்பு இல்லை என்று இலங்கை அரசாங்கம் கூறுவதை நம்பவும் யப்பான் மறுத்துவிட்டது.

இந் நிலையில் வன்முறைகள் அதிகரித்து யுத்தம் தொடங்கக்கூடிய சூழலில் அபிவிருத்திக்கான உதவிகளை நிறுத்த யப்பான் பரிசீலிப்பதாக யப்பான் தூதரக வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன. (கு)

# இலங்கை விடயத்தில் தலையிடுமாறு

# தமிழக அரசு மத்திய அரசுக்கு கடிதம்

## மணலாற்றில் மோதல் 2 இராணுவத்தினர் பலி

### ஆயுதங்கள் மீட்பு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு,மணலாறு காட்டுப்பகுதியில் விடுதலைப்புலிகளின் முன்னரங்க நிலைகளை தாக்கவந்த இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இராணுவத்தினர் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது நேற்று முன்தினம் பிற்பகல் 2.30மணியளவில் தாக்குதல் நடவடிக்கையினை மேற்கொள்ள ம்ற்பட்டபோது விடுதலைப்புலிகள் நடத்திய பதில் தாக்குதலிலேயே இராணுவத்தினர் இரு (10 ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றுக்கூடித்தீர்மானம்

(சென்னை)



இலங்கையில்ஏற்பட்டுள்ளபிரச்சினைகளுக்கு தீர்வுகாண இந்திய அரசு தலையிடவேண்டுமென தமிழக அரசு கோரியுள்ளது. தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி தலைமையில் நேற்றுக்கூடிய திராவிட முன்னேற்றக்கழகக் கூட்டணி இத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. இது தொடர்பான கோரிக்கைகள் அடங்கிய மனு பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கலைஞர் கருணாநிதியால் நேற்று மாலை அவசரமாக அனுப்பப்பட்டுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் மீண்டும் விமானத்தாக்குதல்

(கிளிநொச்சி)

வன்னியில் விமானப்படையின் நான்கு கிபீர் விமானங்கள் நேற்று குண்டுத் தாக்குதல்களை நடத்தின நேற்று மாலை 3.30 மணி முதல் 3.40 மணிவரை நான்கு முறை இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

முன்னதாக நேற்றுக் காலையும் பிற்பகல் ஒரு மணியளவிலும் விமானப்படையின் வேவு விமானம் ஒன்று கிளிநொச்சிப் பகுதியை வட்டமிட்டுச் சென்றதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன. திடீர் திடீரென வரும் கிபீர் விமானங்கள் தாக்குதலை நடத்திவிட்டு சென்றதாக தெரிய வருகிறது. (ச-5)

## நெல்லியடியில் கைக்குண்டு வீச்சு

(துன்னாலை)

நெல்லியடியில் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் படுகாயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.


நெல்லியடி குஞ்சர் கடைக்கும் மூத்த விநாயகர் கோயிலுக்கும் இடைப்பட்ட விழுந்த ஆலடிப்பகுதியிலேயே நேற்று மாலை 5.30 மணியளவில் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து இராணுவத்தினருக்கும் இனந்தெரியாதோருக்குமிடையே சுமார் 15. நிமிடத்திற்கு மேலாக துப்பரக்கிச்சண்டை இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இத் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் யுத்தம் தொடங்கினால் நவீன யுத்திகளை கையாளுவோம்

### தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை



(கிளிநொச்சி)

போர் தொடங்கினால் அனைத்து யுத்திகளையும் கையாள்வோம் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

றொட்டர் செய்தி நிறுவனத்திற்கு மின்னஞ்சல் ஊடாக அவர் அளித்த நேர்காணலிலேயே இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் மீது மற்றொரு கொடூர யுத்தத்தை அரசாங்கம் திணிக்குமானால் இலங்கைத் தீவு முழுமைக்கும் அது விளைவுகளை ஏற்படுத்தும்.

தமிழ் மக்கள் மீது அத்தகைய கொடூரப் போரைத் திணித்தால் தமிழ் மக்களைப்பாதுகாப்பதற்காக எந்தவொரு யுத்தியையும் பயன்படுத்துவோம்.

தமிழர் தாயகத்தில் இருந்து ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேறி மற்ற மக்களைப் போல் எமது மக்களும் இயல்புவாழ்க்கை வாழ்ந்திருந்தால் இராணுவத்துடனான எமது மக்களினது அல்லது எங்களின் மோதல்கள் நடைபெற்றிருக்காது.

இதனை சிங்களத்தரப்பு உணர்ந்திருந்தால் இந்த தீவில் அமைதி உருவாகியிருக்கும். தமிழ் மக்களின் உரிமைகள் நீண்ட காலம் மறுக்கப்பட்டு வரும் நிலையில் இந்தத் தீவில் அமைதி ஏற்படாது.

தமிழ் மக்கள் படுகொலைகளை நிறுத்துவதுதான் பதற்றத்தை (10 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே
கன்னிக் கல்விப் பகுதி

## இலண்டனில் பிசுபிசுத்துப் போன இலங்கை அரசின் பரப்புரை நிகழ்வு

(கொழும்பு)

யுத்த பீதி காரணமாக வீழ்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதற்காக இலங்கை அரசு ஐரோப்பிய நாடுகளின் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு ஈர்க்குமுகாமான பரப்புரைகளை நடத்தி வருகின்றது.

இதன் முதற்கட்டமாக லண்டனில் நேற்று முன்தினம் பெருமெடுப்பிலான பரப்புரை நிகழ்வொன்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, ஜனாதிபதியின் மனைவி ஆகியோர் தலைமையில் நடத்தப்பட்டது.

இந்தப் பரப்புரைக்கு எதிராக இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் மீது அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டுள்ள இனவன்முறைகளை வெளிப்படுத்தும் முகமாக தமிழ் இளையோரால் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. பறை முழக்கி பாரம் பரிய தமிழ் இசைக் கருவிகளை இசைத்து தமிழ் இழையோர் இந்த எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.

இலங்கை அரசின் பரப்புரையை காண வந்த பல்லாயிரம் பிரித்தானியக் குடிமக்கள் தமிழ் மக்கள் நடத்திய எதிர்ப்புப் போராட்டத்தினால் கவரப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் பல கோடி ரூபா செலவில் நன்கு திட்டமிட்டு பெருமெடுப்பில் செயற்படுத்தப்பட்ட இலங்கை அரசின் பரப்புரை முயற்சி எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## அமைதி வழிப்போராட்டம் நடத்த சக்கோட்டை மீனவர்கள் முஸ்தீபு

(யாழ்ப்பாணம்)

அல்வாய் சக்கோட்டை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்களான 3 மீனவர்களும் விரைவில் விடுதலை செய்யப் படாவிட்டால் அமைதி வழிப்போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று மேற்படி சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சங்கம் விடுத்த அறிக்கையில், கடந்த மாதம்28 ஆம்திகதி அல்வாய், சக்கோட்டை கடலில் தொழில் செய்துவிட்டுதிரும்பியமீனவர்களான தேவராசா சாந்தகுமார் (வயது 21), சூசைப்பிள்ளை றெஜினோல்ட் யோகனந் (வயது20), கதிரன் நடராசலிங்கம் (வயது38) ஆகிய மூவரும் இரவு 1.30 மணிக்கு கரையை வந்தடைந்ததும் இராணுவம் அவர்களை கைது செய்தது.

இவர்கள் கைது செய்யப்பட்டதை கண்ணால் கண்டவர்கள பலர் இருந்தும் இராணுவம் அவர்களைகைது செய்து வைத்திருக்கிறது. இக் கைது தொடர்பாக சகல சாட்சிகளுடன் கண்காணிப்புக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் என்பவற்றிடம் முறைப்பாடு செய்யப்பட்டும் அவர்கள் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்நிலை தொடர்ந்தால் மீனவர்கள் பொருளாதார ரீதியாகபாதிக்கப்படுவதுடன் எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற பீதியில் அவர்கள் தமது நாள்களை கழிக்க வேண்டியுள்ளது.

எனவே, மீனவர்களினதும் கைது செய்யப்பட்ட தொழிலாளர்களினதும்நிலைமையை கருத்திற் கொண்டு உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்னும் சில நாள்களில் உரிய பதில் கிடைக்க வில்லையாயின் அமைதி வழிப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் அல்வாய் சக்கோட்டை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு!

வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இதுவரை சீருடை கள், இசைக்கருவி, ஒலிப்பேழை, புத்தகம் முதலியவற்றைப் பெற்றுக் கொள்ளாத பாடசாலை ஆசிரியர்க்ள் இன்று காலை 9.00மணிக்கு நல்லூர் நாவலர்மணிமண்டபத்தில் வந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு வலிகாம இந்து சமய அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் கேட்டுள்ளார். (க)

## இராசி பலன்

**20.06.2006**
**(வைகாசி 06, செவ்வாய்க்கிழமை)**
**நவமி காலை 6.7 மணிவரை**
**தசமி பின்னிரவு 3.58 மணிவரை**
**ரேவதி மாலை 6.52 மணிவரை**
**இராகுகாலம் 2.54-4.24மணிவரை**
**சுபநேரம் 10.24-11.54 மணிவரை**
**சித்தாமிர்தம்**

| | |
|---|---|
| மேடம் | சயனசுகக்குறைவு, எடுத்த காரியம் தமதமாகும், சகோதரர் உதவி, திடீர்நன்மை. |
| இடபம் | கலந்துரையாடல், காரிய அனுகூலம், பெருமையடைதல், சொத்துக்களால் நன்மை. |
| மிதுனம் | கடின முயற்சி, பூர்வபுண்ணிய கருமம், நல்ல செய்தி, நண்பர்கள் உதவி. |
| கடகம் | புதிய திட்டமிடல், பிரயாணம், சரீரபிரயாசை, தந்தைவழி உறவு. |
| சிங்கம் | கடன் பிரச்சினை, எதிரிகள் தொல்லை, எடுத்த கருமங்கள் தாமதமாகும். தொழில் முயற்ச |
| கன்னி | செல்வாக்கு, புதிய திருப்பம், காரிய அனுகூலம் உடல் நலம். |
| துலாம் | எடுத்த கருமங்கள் கைகூடும், நோய் குணமடைதல், போசன சுகம், பொருள் சேர்க்கை |
| விருச்சிகம் | வியாபார நன்மை, சொத்துக்களால் பிணக்கு, முயற்சி தாமதம், பணவிரயம். |
| தனுசு | நண்பர்கள் சந்திப்பு, காரிய தாமதம், பொருள்விரயம், மனச்சோர்வு. |
| மகரம் | அன்னியர் சந்திப்பு, முயற்சி கைகூடும், சுவாரஸ்யம், சகோதரர் நன்மை. |
| கும்பம் | கௌரவக்குறைவு, சொத்துக்களால் நன்மை, சுப செலவு, முயற்சி தாமதம். |
| மீனம் | தொழில் முயற்சி, கற்பனை மிகுதி, உறவினர் சந்திப்பு, போசன சுகம். |

- வளவன்

## கொள்கலன்களில் இராணுவ தளபாடங்கள் நகர்வு?

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள இராணுவத்தினரின் தேவைகளுக்கென இராணுவத் தளபாடங்கள் எடுத்து வரப்படுவதாக படைத்தரப்பின் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. கடந்த இரண்டு நாட்களாக இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாரிய கொள்கலங்களில் பல இராணுவ வாகனங்கள் மற்றும் சலடின் இராணுவ வாகனங்கள், பாதுகாப்பு கொடுக்க வீதிகளில் செல்லும் வாகனங்கள் அனைத்தும் மறிக்கப்பட்டு இந்த வாகனங்கள் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதாகவும்,

குறிப்பிட்ட ஆயுத கொள்கலன்கள் எடுத்துச் செல்லும் நேரத்தில் வீதியில் உள்ளவாகனங்கள் பெருமளவில் அருகில் உள்ள ஒழுங்கைகளுக்குள் செல்ல இராணுவத்தினர் பணிப்பதுடன் பொது மக்கள் நடந்தும் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை என்றும், வீதிகளில் மிகவும் நெருக்கமான முறையில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்ட நிலையிலேயே இந்தப் பொருட்கள் கொண்டு செல்லபடுகின்றன எனவும் கூறப்படுகின்றது.

இந்த உபகரணங்கள் பெருமளவில் தென்மராட்சி, வடமராட்சி மற்றும் தீவகப் பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றதாகவும் இத்தகைய நடவடிக்கைகளினால் பொது மக்கள் மத்தியில் பதட்டமான நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## எரிபொருட்களின் விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பபாட்டை சிலர் வாய்ப்பாக பயன்படுத்தி கறுப்பு சந்தையில் எரிபொருட்களை அதிக விலைக்கு விற்று வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக தீவுப் பகுதியிலேயே எரிபொருட்களை அதிகவி லைக்கு விற்று வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் மண் ணெண்ணைய் அதிக விலையில் விற்ப னை செய்யப்படுவதால் விவசாயிகள், கடற் றொழிலாளர்கள், பொது மக்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர். (க-7)

## கறுப்பு பட்டிப் போராட்டத்தில் ஐரோ.சமூகத்தினரும் இணைவு




தமிழ் மக்களை அழிக்கும் இலங்கை அரசிற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் புலிகள் மீதான தடை ஊக்கமளிப்பதை ஐரோப்பிய மக்களுக்கு விளக்கும் கறுப்புப்பட்டிப்போராட்டத்தை புலம் பெயர் தமிழர்கள் கடந்த வாரம் முன்னெடுத்தனர்.

இதில் ஐரோப்பிய இளையோரும் இணைந்து கொண்டனர். தமிழர்களுடைய குரல்கள் ஐரோப்பிய மக்களுக்கும் கேட்கத்தொடங்கியிருக்கின்றன என்பதை அவர்களின் பங்கு கொள்ளல் உணர்த்துகிறது. (க)

## சகல துறைமுகங்களினதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

கொழும்பு துறைமுகம்உட் பட துறைமுக அதிகார சபை யின்கீழ் இயங்கும் சகல துறைமுகங்களினதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கடற்படையினர் மற்றும் துறைமுக அதிகார சபையின் பாதுகாப்புச் சேவைப்பிரிவினர், ஒருங்கிணைந்து இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டிருப்பதாவது,

துறைமுகங்களுக்கு வரும் வாகனங்கள் அனைத்தையும் சோதனை செய்யவும் பிரதான நுழைவாயில்கள் அனைத்தையும் 24மணி நேரம் தொடர்ந்தும் கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடல்மார்க்கமாக வரும் கப்பல்கள் தொடர்பாகவும் கூடுதல் கவனம் செலுத்த ப்படவுள்ளது. இதே வேளை, சர்வதேச மட்டத்தி லும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கப்பல்போக்கு வரத்து நடவடிக்கைகளும் சுமுகமாக இடம் பெற்று வருகிறது. கொழும்பு துறைமுகத்திற்கு நாள் ஒன்றிற்கு சுமார் 30 கப்பல்கள் வந்து செல்கிறது. (க-9)

## குடாநாட்டில் அபி.பணிகள் ஸ்தம்பிதம்! ஒதுக்கப்பட்ட நிதியும் திரும்பும் அபாயம்!!

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில்ஏற்பட்டுள்ள குழப்பமான சூழலாலும் அதனால் எழுந்துள்ள பாதுகாப்பின்மையாலும், அபிவிருத்திப்பணிகளுக்கென பல தரப்புகளாலும் ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படாது திருப்பி அனுப்பப்படலாம் என அஞ்சப்படுகிறது.

குறிப்பாககடந்த காலயுத்தஅனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தீவகப் பகுதி மற்றும் தென்மராட்சியின் கரையோரப் பகுதிகளின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட பெருமளவுநிதி பயன்படுத்தப்படாது தேங் கியு ள்ளது. யுத்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதியி லும் வலிகாமத்தின் பின் தங்கிய பகுதிகள் சிலவற்றிலும் இந்நிலையே நீடித்து வருகின்றது.

குறிப்பாக கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென அரசினாலும் உலக வங்கி உள்ளிட்ட உதவி வழங்கும் தரப் புகளாலும் பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. எனினும் மேற்குறித்த பகுதி களில் எழுந்துள்ள படையினரது கெடுபி டிகளாலும் அச்சமூட்டும் தொடர் கொலைகளாலும் ஒப்பந்தக்காரர்கள் எவரும் குறித்த வேலைகளைச்செய்ய முன்வராதுள்ளனர். இதனால் வகுக்கப்பட்ட திட்டங்கள் உரிய வகையில் அமுல்படுத்தப்பட முடியாத நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறானதோர் சூழல் தொடர்ந்தால் ஒதுக்கப்பட்டுள்ள நிதி தென் பகுதிக்கு திருப்பப்படுவது தவிர்க்கப்பட முடியாததாகி விடுமென யாழ். செயலக உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (க-7)

## பரீட்சை

(கொழும்பு)

இந்து தர்மாசிரியர் பரீட்சை கடந்த 17 ஆம் திகதி நடத்தப் பட்டது. தொடர்ந்து எதிர்வரும் 24, 25 ம் திகதிகளிலும் நடை பெறவுள்ளது. அகில இலங்கை ரீதியாக சகல மாவட்டங்களிலும் இப்பரீட்சை இலங்கைப் பரீட் சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வருகிறது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இப்பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் விண்ணப்பித்த சகல பரீட்சாத்திகளுக்கும் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. இப்பரீட்சை 2005 ஆம் ஆண்டுதர்மாசிரியர்பரீட்சைக்குவிண்ணப்பித்தவர் களுக்கேநடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (க-7)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அருள் மிகு சுன்னாகம் மயிலணி கந்த சாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறும்.

நாளை காலை 10 மணிக்கு கொடியேற்றமும், 25 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு ஆறுமுக சுவாமி நடனமும், 27 ஆம்திகதி செவ்வாய்க் கிழமை மாலை 5மணிக்கு கையிலாய வாகனத் திருவிழாவும், 30 ஆம் திகதி வெள்ளிக் கிழமை பகல் வேட்டைத் திருவிழாவும், அன்று மாலை திருக்கல்யாணமும் சப்பறத்திருவிழாவும்,

01.07 .2006 ஆம் திகதி சனிக் கிழமை காலை 10. 30 மணிக்குத் தேர்த்திரு விழாவும், 2.7.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், மாலை 4 மணிக்கு திருவூஞ் சலும் கொடியிறக்கமும் சண்டேஸ்வரர் உற்சவமும் ஆசாரியர் உற்சவமும் நடைபெறும். (கு)

# தமிழர்களின் உரிமைப் போராட்டம் வெற்றிபெற வேள்வித் தீப் போராட்டம்

உலகத் தமிழர்கள் ஒன்று கூடி நடாத்திவரும் உரிமைக் குரல் போராட்டத்தின் தொடர்ச்சியாக கடந்த 12 ஆம் திகதி முதல் 16



ஆம் திகதி வரை நடைபெற்ற அனைத்துலக கவன ஈர்ப்பு கறுப்புப்பட்டி போராட்டத்தின் நிறைவு நாளன்று சர்வமத பிரார்த்தனைகளும் கோவில்களில் யாகவேள்வி நிகழ்வுகளும் நடத்தப்பட்டன.

தமிழர் தாயகத்தில் அதிகரித்து வரும் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்தக் கோரியும், தமிழீழ விடுதலைப் புலிகள் மீது நீதியற்ற முறையாக ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடையை உடனடியாக நீக்கு மாறும் புலம்பெயர் தமிழர்கள் பல் வேறு போராட்டங்களை நடத்துகின்றனர்.

சுவிஸ் நாட்டவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்பட்ட கறுப்புப் பட்டி கவன ஈர்ப்புப் போராட்டத்தின் நிறைவில் சுவிஸில் அமைந்திருக்கக் கூடிய 22 கோயில்களில் சிறப்பு வழிபாடுகளும் கூட்டுப் பிரார்த்தனைகளும் நடத் தப்பட்டன.

சூரிச் சைவத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஒருங்கிணைக்கப்பட்ட வழிபாட்டு நிகழ்வில் சூரிச் சிவன் கோவில், பேர்ண் முருகன் ஆலயம், லுசேர்ண் அம்மன் கோவில், பாசல் இந்து ஆலயம், லவுசாண் பிள்ளையார் கோவில் ஆகியவற்றில் தமிழர் உரிமைப் போராட்டம் வெற்றி வாகை கொள்வதற்கு விசேடயாக பூசைகளும் அமைதி வேள் விப் பூசைகளும் நடைபெற்றன.



இந்த சிறப்பு வழிபாட்டு நிகழ்வுகளை சுவிஸ் நாட்டு ஊடகங்கள் நேரடியாக சென்று மேற் படி நிகழ்வுகளை பதிவு செய்து சுவிஸ் நாட்டவருக்கு வெளிப்படுத்தின.

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் உச்ச வடிவமான உரிமைக் குரல் பல வடிவந் தாங்கி தமிழர் தாயக விடுதலைக்கு ஆகுதியாகும் உணர்வுப் போராட்டத்தின் உயிர் வடிவமே இப் பிரார்த்தனை மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் தெடர்ச்சியாக சுவிஸ் தமிழ்ச் சமூக கத்தோலிக்க ஆன்மீக பணியகத்தினால் அயன்ஸ் சீலடன் கத்தோலிக்க தேவாலயத்தில் அமைதியும் சமாதானமும் வெற்றி வாழ்வும் வேண்டி திருப்பலி ஒப்புக்கொடுத்தல் நிகழ்வும், ஆண்டகை பிரார்த்தனை வழிபாடும் விரைவில் நடைபெறவுள்ளது.

இதனிடையே ஈழத் தமிழரின் வாழ்வு விடிவுபெறவும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மீது இன்றிருக்கும் அனைத்துத் தடைகளையும் உடைத்தெறிந்து தமிழர் போராட்டம் வெற்றிபெறவும் தமிழர்களின் ஏகபிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழர்களின் ஆத்மாவான தமிழீழத் தேசியத் தலைமையையும் இறையருள் ஆசீர்வதிக்குமாறு வேண்டியும் கோரமாகப் படுகொலை செய்யப்பட்ட பிஞ்சுக் குழந்தைகள் தமிழீழ மக்கள் ஆகியோரின் ஆத்ம சாந்திக்காகவும் சூரிச் கிருஸ்ணன் கோவிலில் விசேட கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வும் வழிபாடுகளும் விரைவில் நடைபெறவுள்ளன. (க)

# படையினரின் தாக்குதலில் மனநோயாளி பலி!

(கொழும்பு)

சந்திவெளியைச் சேர்ந்த மனநோயாளி ஒருவரை படையினர் துப்பாக்கியால் சுட்டும் கைக் குண்டை வெடிக்கவைத்தும் படுகொலை செய்துள்ளனர்.

உயிரிழந்தவர் சந்திவெளியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான காத்தமுத்து நாகராசா வயது -46 என்பவராவார்.

நேற்றுமுன்தினம் துவிச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்த போது படை யினர் வண்டியை நிறுத்துமாறு துப்பாக்கி சூடு நடத்தினர். காலில் சூடுபட்டு வீழ்ந்த அந்த நபரை படையினர் கைக் குண்டை வெடிக்க வைத்து படு கொலை செய்துள்ளனர். (க)

# குமார் ரூபசிங்கவிடம் பொலிஸார் விசாரணை

இலங்கையின் போருக்கு எதிரான தேசிய முன்னணி தலைவர் குமார் ரூபசிங்கவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கடந்த வாரம் விசாரணை நடத்தியுள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் 4ஆம் மாடியில் 45 நிமிட நேரம் இந்த விசார ணை நடத்தப்பட்டது.

அண்மையில் முஸ்லிம் சபை சார்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பேசிய குமார் ரூபசிங்க, போர் உடனே நிகழப் போகிறது என்று கூறியிருந்தார்.

குமார் ரூபசிங்கவின் பேச்சானது நாட்டினது பாதுகாப்புக்கு ஊறுவிளைவிக்கக் கூடியதாகக் கூறி அவரிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து குமார் ரூபசிங்க கருத்துத் தெரிவிக்கையில்,

முஸ்லிம் சபையில் கடந்த செவ்வாய்க்கிழமை நான் உரையாற்றினேன். அதில் வடக்கு-கிழக்கு நிலைமைகள் போரை உருவாக்கி வருகின்றன. அப்பாவி மக்களுக்கு மனிதாபிமான அமைப்புகள் உதவ தயாராக இருக்கவேண்டும் என்று கூறினேன்.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசையின் பேச்சையும் சுட்டிக்காட்டினேன். உயர்தரப் பரீட்சைகள் முடிவடைந்த நிலையில் தாக்குதல்களைத் தொடரப் போவதாக பொங்கியெழும் மக்கள் படை அறிவித்திருந்ததையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தன்னாட்சி அரசாங்கத்தைப் பற்றி கூறியிருந்ததையும் குறிப்பிட்டேன்.

அதேபோல் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் நாள் உரையில் இந்த ஆண்டுதங்களது விடுதலைப் போராட்டத்தை தொடங்கவுள்ளதாகத் தெரிவித்திருந்ததையும்கூட்டத்தில் பேசிய போது நான் சுட்டிக்காட்டினேன்.

அனைவருமே திரும்பத் திரும்ப கூறிவருவதையே நானும் அக் கூட்டத்தில் பேசினேன்.

நான் பேசியமை குறித்து விளக்கம் கேட்டனர். அதற்கான வாக்குமூலத்தை அளித்து வந்துள்ளேன் என்றார். (க)

## உரப்பைகளை வன்னிக்கு கொண்டு செல்ல முயன்றவர் கைது

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு 76ஆயிரம் உரப்பைகளை எடுத்துச் செல்ல முயன்ற நபரொருவரை ஓமந்தை இராணுவ காவலரண் அதிகாரிகள் கடந்த 12 ஆம் திகதி நண்பகல் கைதுசெய்தனர்.

பாதுகாப்பு பதுங்குகுழிகளை அமைக்கவே இவர் இப் பைகளை வன்னிக்கு கொண்டு செல்ல முயன்றதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

லொறியில் ஏற்றி வன்னிக்குக் கொண்டு சென்ற மேற்படி உரப்பைகளை உயிலங் குளம் வீதிச் சோதனை சாவடியிலிருந்த படையினர் கைப்பற்றினர். (க-7)

## மாடுகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கடந்த சில நாட்களாக பலருடைய மேய்ச்சலுக்கு விடப்பட்ட மாடுகள் காணாமற் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றில் நல்லூர் கோவிலுக்கு உரிய தான சில மாடுகளும் அடங்கும்.

நாள்தோறும் இரண்டு, மூன்று என்று அடிப்படையில் மாடுகள் காணாமற் போவதையிட்டு மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

நகரப் பகுதியில் மாடுகளைக் கட்டி வளர்ப்பதற்கு ஏற்ற இடம் இல்லாததனாலே கட்டி வளர்ப்பதற்கு முடியவில்லை. இதுபோன்ற திருட்டுச் சம்பவங்கள் முன்னைய காலங்களில் நடந்ததில்லை எனவும் கடந்த சில நாட்களாகவே இச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-133)

## வீதித் தடை

(யாழ்ப்பாணம்)

வெலிங்டன் சந்தியிலும் ஆரியகுளச் சந்தியிலும் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை ஆரியகுளம் சந்திப் பகுதியில் 'காலை 6 மணி முதல் மாலை 6மணி வரை பிரயாணத்திற்கு பயன்படுத்த முடியும்' என எழுதப்பட்ட பலகை ஒன்று தொங்கவிடப்பட்டுள்ளது.

(க-132,133,15)

# தமிழிலும், சிங்களத்திலும் தீவகத்தில் சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள படையினரை பாதுகாப்பாக ஊர் திரும்புமாறு தீவகத்தில் தமி ழிலும் சிங்களத்திலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மண்டதீவு, நெடுந்தீவுப் பகுதிகளில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாகவும் அச் சுவரொட்டிகளில், ''ஆக்கிரமிப்பு எண்ணத்தை கைவிட்டு உங்கள் உறவுகளுடன் சந்தோஷமாக வாழ மீண்டும் ஓர் சந்தர்ப்பம் உங்களுக்கு தருகிறோம்'', ''உடனே ஊர் திரும்பி உங்கள் உறவுகளுடன் வாழுங்கள். நாங்கள் எங்கள் மண்ணில் எங்கள் உறவுகளுடன் வாழ்வதற்கான உறுதியான முடிவை எடுத்துவிட்டோம்'', ''தமிழர்களின் தாயக பூமியில் தான் நீங்கள் அநியாயமாக இறக்கப் போவதாய் முடிவு செய்தால் கடவுள் கூட உங்களைக் காப்பாற்ற முடியாது''

''நீங்கள் அழிவது உறுதி. நாங்கள் வாழ்வது உறுதி. சிங்களப் படையே இறுதிச் சந்தர்ப்பத்தை பயன்படுத்து'' என குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. (க-7)

# மோசமான நிர்வாகத்தால் அரசுக்கு 359 பில்லியன் ரூபா இழப்பாம்!

(கொழும்பு)

அரசாங்கத்தின் மோசமான நிர்வாகத்தால் அரசாங்கத்துக்கு கிடைத்திருக்க வேண்டிய 359 பில்லியன் ரூபாய் கிடைக்கவில்லை என்று இலங்கையின் கணக்காய்வாளர் அறிக்கை குற்றம்சாட்டியுள்ளது.

வரி வசூல் நிர்வாக அமைப்பின் திறமையின்மை மற்றும் ஊழலால் இந்த இழப்பு ஏற்பட்டிருப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது.

உள்நாட்டு வருவாய்த் திணைக்களம் மற்றும் சுங்க வரித்திணைக்களம் மற்றும் மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களம் ஆகியவற்றை ஆய்வுசெய்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

திறமையற்ற நிர்வாகத்தினால் மொத்தம் 22 பில்லியன் ரூபாய் இழப்பும் உரியவிசாரணைகளின்றி வரி பாக்கிகளை தள்ளுபடி செய்ததில் 47 பில்லியன் ரூபாய் இழப்பும் வற் வரி மோசடியில் 241 பில்லியன் ரூபாய் இழப்பும் வரிப் பாக்கிகளை வசூலிக்காத வகையில் 20 பில்லியன் ரூபாய் இழப்பும் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (க)

# அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவு

அரசாங்கத்தின் பரிந்துரைக்கமைய ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு அதிகரிப்பு சம்பந்தப்பட்ட பணிகள் ஒழுங்கான முறையில் கிடைக்கும் தரவுகளுக்கமைய வழங்கப்பட்டு வருவதாக நல்லூர் பிரதேச செலயக கணக்காளர் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச செயலகத்தினூடாக 2200 ஓய்வூதியர்கள் ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள் என்றும், இதுவரை கிடைக்கப்பட்ட ஓய்வூதிய மீளமைப்புத் தரவுகளுக்கமைய அனேகமானவர்களுக்கு அதிகரித்த கொடுப்பனவு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாகவும், நிலைமை சீராக இருந்தால் ஏனையவர்களது அதிகரித்த கொடுப்பனவுகளை விரைவில் வழங்கக் கூடியதாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (து-133)

# இலங்கை துடுப்பாட்ட அணிக்கு தடை விதிக்குமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

தமிழீழ தாயக மக்கள் மீது இலங்கை அரசாங்கத்தினால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கொலை வெறியாட்டங்களை மேற்குலக மக்களின் கவனத்திற்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் பிரித்தானியாவில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.





லண்டன் (Lords) லோட்ஸ் துடுப்பாட்ட மைதானத்தில் கடந்த சனிக்கிழமை 9.30மணியளவில் பிரித்தானியா வாழ் தமிழர்களால் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந் நிகழ்வில் இலங்கை அரசாங் கத்தின் கொலை வெறியாட்டங்களை வெளிப்படுத்தும் வகையிலான பதாதைகளை தாங்கியவாறு உணர்வுபூர்வமாக முழக்கமிட்டனர்.

உலகச் சமூகமே இலங்கை துடுப்பெடுத்தாட அணியின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு தடை விதித்தது. ''இலங்கை அரசாங்கமே தமிழின அழிப்பு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்து'', ''உல்லாசப் பயணிகளே இலங்கைக்கு செல்வதை தவிருங்கள்'' என முழக்கமிட்ட பிரித்தானியா வாழ் தமிழர்கள் துண்டுப்பிரசுர விநியோகத்திலும் ஈடுபட்டனர்.

லோா்ட்ஸ்துடுப்பெடுத்தாட்டமைதானத்தில்கடந்த சனிக்கிழமை சினேகபூர்வ போட்டியில் இலங்கை துடுப்பெடுத்தாட்ட அணி ஈடுபட்டிருந்த ஏககாலத்தில் பிரித்தானிய வாழ் தமிழீழ மக்களின் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கறுப்பின மக்கள் ஒடுக்கப்பட்ட போது, தென்னாபிரிக்க துடுப்பெடுத்தாட்ட அணிக்கு விதிக்கப்பட்ட தடைபோன்று இலங்கை துடுப்பெடுத்தாட்ட அணிக்கும் தடை விதிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவில் மனுவொன்றும் கையளிக்கப்பட்டது. (க)

## இன்று ஒரு தகவல்

# தொலைவு இருத்தல்

எனக்குத் தெரிந்த ஒருவர் கார் வைத்திருக்கிறார். அதில் ஏறிஇருந்து ஓட ஆரம்பித்தார் என்றால் போதும் வழியில் போவோர் வருவேரையெல்லாம் திட்டிக் கொண்டே போவார். ஏதோ இவர் மட்டும்தான் சாலையில் ஒழுங்காக போவது மாதிரியும் மற்றவர்கள் தாறுமாறாக போவது மாதிரியும் அவருக்கு நினைப்பு. எதிரில் யாரும் வரவில்லைஎன்று வைத்துக்கொள்ளுங்கள் அப்போதும் திட்டுவார். என்னதெரு இது? சுடுகாடு மாதிரி என்பார். அப்படி ஒரு பழக்கம் அவருக்கு.

இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் வசதியாக அமையக் கூடிய ஒரு தொழில்நுட்பம்தான் தொலைவு இருத்தல் என்பது அதாவது telepresence இது ஒரு நவீன உத்தி முறை . நம்மைத்தொலைவில் இருப்பதாகவே நினைக்கச் செய்யும் ஒரு தோற்றஅனுகூலம். இது எப்படியென்றால் கார் செலுத்துபவர் காரில் தான் இருக்கவேண்டுமென்ற கட்டாயமில்லை. அவர் இன்னொரு ஊரில் கூட இருக்கலாம்.

அதாவது ஒருவர் மதுரையில் உட்கார்ந்து கொண்டு சென்னை அண்ணா சாலையில் காரோடலாம் வழியில் போவோர் வருவோரை திட்டலாம். வம்பு வராது. ஏனென்றால் அவர்களின் காதில் இது விழாது. இது எப்படிப் பட்டதென்றால் தொலைவு இருப்பு முகமூடி என்று ஒன்று... அதைத் தலையில் மாட்டிக்கொள்ள வேண்டியது. அந்த முகமூடிக்குள் ஒரு சின்னத்திரை இருக்கும் நீங்கள் இதை மாட்டிக்கொண்டு மதுரையில் ஒரு குளிர்சாதன அறைக்குள் கணிப் பொறிப் பெட்டிகளுக்கு மத்தியில் உட்கார்ந்திருக்கிறீர்கள்.

அந்தச் சின்னத் திரையில் சென்னையில் உள்ள அண்ணாசாலை தெரிகிறது. எதிரில் வரும்கார் . குறுக்கே போகும் சைக்கிள் எல்லாம் தெரியும் . கார்ச் சாரதி சீற்றில் நீங்கள் உட்கார்ந்திருந்தால். என்னென்ன தெரியுமோ அது எல்லாம் அந்த சின்னத்திரையில் தெரியும். பிறகென்ன கஷ்டம் . நீங்கள் பாட்டுக்கு மதுரையில் ஓர் அறைக்குள் உட்கார்ந்து கொண்டு காரோடிக் கொண்டு போகலாம். சைக்கிள் குறுக்கே வந்தால் சடாரென்று காரை நிறுத்தலாம். இடது பக்கம் ஒரு ஸ்கூட்டர் ஆசாமி வேகமாகப் போகிறாரா? அவரை விரட்டிப்பிடிக்கலாம்.

சென்னை அண்ணா சாலையில் நீங்கள் கார் ஓடுவது நிஜம். ஆனால் மதுரையில் உங்கள் முகமூடிக்குள் தெரிவது மாயத் தோற்றம் ... அதை மாய நிஜம் அல்லது மாய யதார்த்தம் என்று சொல்கிறார்கள் .virtual reatity. விண்வெளி ஆராய்ச்சிக்கெல்லாம் இந்தத் தொழில் நுட்பம் மிகவும் உபயோகப்படும். இயந்திர மனிதர்களை செவ்வாய்க் கிரகத்தில் இறக்கி விட்டு விட வேண்டியது . இங்கே முக மூடியை மாட்டிக் கொண்டு உட்கார்ந்து கொண்டே அவர்களை வேலை செய்ய வைக்கலாம். எந்தப்பக்கம் போக வேண்டுமோ போக வைகலாம். மண்ணைத்தோண்டி யெடுக்க வேண்டுமா எடுக்க வைக்கலாம். அங்கே போய் நாம் என் னென்ன செய்ய வேண்டுமென்று நினைக்கிறோமோ அதையெல்லாம் இங்கே இருந்து கொண்டே செய்யலாம்.

பூமியிலிருக்கும் கட்டுப்பாட்டு அறைக்குள் இருந்து கொண்டு முகமூடியை மாட்டிக்கொண்டு கைகால்களில் மின்னணு உணர்கருவிகளைப் பதித்துக் கொண்டு செவ்வாய்க்கிரகத்தில் உள்ள தொலைவு ஊர்திகளை இயக்கலாம். செவ்வாய்க்கிரகத்தில் சேகரிக்கப்படும் தகவல்கள் மின்காந்த அலைத் தொடர்பு வழியாக பூமிக்கு வந்து சேர குறைந்தது 20 நிமிடமாவது ஆகும்.. ஆனால் இந்த முகமூடியை ப் போட்டிருப்பவர் உடனுக்குடன் அங்கே பார்ப்பதை நேரடி வர்ணனை செய்யலாம்.

இந்த மாயத் தோற்ற அறிவியல் எதிர்காலத்தில் பெரிய பெரிய வேலையெல்லாம் செய்யப்போகிறது. இந்த வசதி வரும் வரை நாம் சாரதி சீற்றில் உட்கார்ந்து காரோட்டுவது தான் நல்லது.

ஒரு பேருந்து சாரதி திடீரென்று சிரிக்க ஆரம்பித்தாராம் 'ஏன் சிரிக்கிறீர்கள் ? ' என்று கேட்டார் பக்கத்தில் இருந்தவர் 'துன்பம் வரும் போது சிரிக்கச் சொல்லியிருக்கிறார்கள் பெரியவர்கள்... அதனால் சிரிக்கிறேன்' என்றார்.

'யாருக்குத் துன்பம் இப்போது ?' என்றார். இவர் 'நம் எல்லோரும் தான' என்றார்அவர். 'எப்படிச் சொல்கிறீர்கள் ? ' என்றார். எதிரில் பாருங்கள் ஒரு சக்கரம் உருண்டு ஓடிக்கொண்டிருக்கிறது என்றார் அவர் . அந்த சக்கரத்திற்கும் நமது துன்பத்திற்கும் என்ன சம்பந்தம் என்றார் அவர் . அது நமது பஸ்சிலிருந்து தான் கழன்று ஓடிக்கொண்டிருக்கிறது என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தனது அரசாங்கம் ஊழல் மலிந்ததென மஹிந்த ராஜபக்ஷ ஒப்புதல் வாக்குமூலம்

(கொழும்பு)

எனது அரசாங்கத்தின் அமைச்சர்களின் ஊழல்கள் தொடர்பாக நாளாந்தம் இரு அறிக்கைகளைப் பெற்று வருகிறேன் என்று மஹிந்த ராஜபக்ஷ ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.



கொழும்பில் கடந்த வாரம் 26 அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களை ஆலோசனை நடத்துவதற்காக ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ அழைத்திருந்தார்.

இக்கூட்டத்தில் சந்திரிக்கா , அனுரா பண்டார நாயக்க மற்றும் மஹிந்தவின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். மஹிந்தவின் அமைச்சரவையில் உள்ள மூத்த அமைச்சர் களின் ஊழல் விவகாரமும் இக்கூட்டத்தில் பேசப்பட்டது.

பிரதி அமைச்சராக உள்ள மகிந்தானந்த அளுத்கமகே தொழிலாளர் அமைச்சின் ஊழல் பற்றி விபரித்தார். மேலும் பல அமைச்சர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களது ஊழல் விபரங்களை வாசித்தார்.

இதே போல் பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களின் ஊழல் விவகாரங்களை அம்பலப் படுத்திக் கொண்டிருந்தனர். நாம் இப்போது தேர்தலுக்கு முகம் கொடுக்க முடியாது. பல அமைச்சர்கள் ஊழல் திருட்டுக்களில் ஈடுபடுகின்ற போது ஜனாதிபதி ஏன் அமைதியாக இருக்கிறார் என மக்கள் கேள்வி எழுப்பு கின்றனர் என்றும் சிலர் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி மஹிந்த ரரீஜபக்ஷவும் அமைச்சர்களின் ஊழல்களை அம்பலப்படுத்திக் கொண்டிருந்தார். " ஒவ்வொரு நாளும் அமைச்சர்களின் ஊழல் செயற்பாடுகள் தொடர்பான இரு கோப்புகளை நான் பெற்றுக் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியாது. இதில் பிரச்சினை என்ன வெனில் எனக்கு மிக நெருக்கமானவர்கள் தான் இந்த ஊழல்களைச் செய்கின்றனர். நான் என்ன செய்து விட முடியும். அமைச்சரவை மாற்றத்தின் மூலம்தான் எச்சரிக்க முடியும் . அதை விரைவில் செய்வோம். சிலர் என் மீது கோபப்படுவர். எனக்கு வேறு வழியில்லை" என்று மஹிந் த ராஜபக்ஷ கூறினார்.

இந்த நிலையில் மஹிந்த அரசாங்கத்தின் ஊழல் விவகாரத்தை கையில் எடுக்க ஜே. வி. பி முடிவு செய்துள்ளது. முதல் தாக்குதலை மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர் அமைச்சர் சமல் ராஜ பக்ஷவின் உர ஊழலை வெளியிடப்போவதாக ஜே. வி. பி யின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க அறிவித்துள்ளார்.

அனுரா குமார திஸ நாயக்கவின் இந்த அறிவிப்பால் மஹிந்த ராஜபக்ஷ அதிர்சியடைந்திருப்பதாக கூறபடுகிறது.

இதனால் ஜே. வி. பியின் தலைவர்களை சமரசப் பேச்சுக்கு வர மஹிந் த அழைத்தார். கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இந்த சமரசப் பேச்சு வார்த்தை நடைபெற்றது.

அமைதியாக தொடங்கிய இப்பேச்சுவார்த்தை ஆவேசமான விவாதங்களுடன் நள்ளிரவு வரை நீடித்துள்ளது.

உர ஊழல் தொடர்பான அனைத்து விபரங்களும் மஹிந்தவிடம் கையளித்த அனுர குமார திஸநாயக்க, விவசாயத்துறை அமைச்சின் ஊழலையும் அம்பலப் படுத்தினார். இதையடுத்து மஹிந்த ராஜபக்ஷ சிரித்துக் கொண்டே கூறியதாவது: எனக்கு ஒரு தகவல் கிடைத்தது அது உண்மையோ பொய்யோ தெரியாது. அமைச்சர்களின் ஊழலை அம்பலப்படுத்துவதன் மூலம் ஜே.வி. பி தனது வாக்கு வங்கியை அதிகரிக்க முடிவு செய்திருப்பதாக கூறுகின்றனர்.

நீங்கள் அமைச்சர்களின் ஊழலை அம்பலப்படுத்தும் போது அது எனக்கு கெட்ட பெயரை உருவாக்கும் என்று கூறியுள்ளார். மேலும் " என்னிடம் இந்தத் தகவலைத் தெரிவித்த நபர் கூறியது உண்மையோ பெய்யோ தெரியாது" ஆனால் உண்மையாக இருக்கும் நிலையில் நாம் எப்படி இணைந்து செயற்பட முடியும் என்றும் மஹிந்த கேள்வி எழுப்பினார். ஆனால் ஜே. வி.பி யின் அனுர குமார திஸநாயக்க மஹிந்தவின் கருத்தை நிராகரித்தார்.

உங்களுக்கு அவப் பெயரை ஏற்படுத்தும் நோக்கம் எங்களுக்கு இல்லை. நீங்கள் இந்த நாட்டின் ஜனாதிபதி உங்களது ஆளுமையை பாதுகாப்பது எப்படி என்று உங்களுக்குத் தெரியும். ஆனால் மக்கள் எங்களை நோக்கி கேள்வி கேட்கின்றனர் எப்படி இந்த ஊழல் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகிறீர்கள் என்று ? அந்தக் கேள்விக்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டும் என்று அனுர குமார திஸநாயக்க கூறினார்.

இதையடுத்து பிரச்சினையை திசை திருப்பிய மஹிந்த ராஜபக்ஷ" நீங்களும் அமைச்சரவையில் இணைந்து கொள்ளத் தாயாரா ? '' என்று கேள்வி கேட்டுள்ளார். ஆனால் ஜே.வி. பியினரோ அமைதி காத்துள்ளனர். (க)

## பிடிக்கப்பட்ட படகிலிருந்து — 80 கிலோ நிறையுள்ள குண்டு மீட்பு

கற்பிட்டி தலவிலப் பிரதேசத்தில் எரிபொருள் இல்லாத நிலையில் கரையே ாரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகிலிரு ந்து 80 முதல்100 கிலோக்கிராம் வரையிலான அதி சக்தி வாய்ந்த வெடிபொருட்களை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் அரிப்புத்துறைப் பகுதியிலிருந்து இப் படகு நீர் கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே எரிபொ ருள் முடிந்த நிலையில்கரை ஒதுங்கியுள்ளது.

கடற்படையினருக்கும் , விடுதலைப் புலிகளுக்கும் கடந்த சனிக்கிழமை சமரில் ஈடுபட்ட நிலையில் இந்தப்படகு தப்பி வந்ததாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் இப் படகு அதிரடிப்படையினரின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவி னரால் சோதனையிடப்பட் டதுடன் படகில் பொருத்தப்பட் டிருந்த வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளது. இந்தப் படகினைச் செலுத்தி வந்தவர் மீனவர்களிடம் எரிபெ ாருள் பெற்றுக்கொள்ள முயற்சித்த வேளை கற்பிட்டி பொலிஸரால் கைது செய்யப் பட்டார்.

கைது செய்யப்பட்டவர் முல்லைத்தீவைச் சேர்ந்த குமார் அன்ரனி தாஸ் என பொலிஸார் தெரிவித்தனர். இதே வேளை இப் படகு நீர் கொழும்பு பிரதேசத்திலேயே வடிவமைக்கப்ப ட்டதாக கூறப்படுகின்றது . (ச–5)

# தேசிய மக்கள் பாதுகாப்பு படையை அரசு விரைவில் உருவாக்கும்!

(கொழும்பு)

இலங்கையின் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளில் இளைஞர்களை ஈடுபடுத்த தேசிய மக்கள் பாதுகாப்பு படையை அரசாங்கம் விரைவில் உருவாக்கவுள்ளது.

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இந்தப் படையணி உருவாக்கப்படும். இதன் முதற்கட்ட அணியானது மேற்கு மாகாணத்தில் பிரதிபொலிஸ்மா அதிபர் டிடபிள்யூ. பிரதாபசிங்க தலைமையில் உருவாக்கப் படும்.

வடக்கு–கிழக்கைப் பாதுகாப்பதற்காக தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் படையணிக் கட்டுமானத்தை உருவாக்கியதைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் இம்முடிவை மேற்கொண்டிருப்பதாக கொழம்பு ஆங்கில ஊடகம் ஒன்று கருத்து தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் தேசப்பற்றுச் சட்டம் தொடர்பாகவும் இலங்கை அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக கூறப்படுகிறது. போர்ச் சூழலில் எதிர்கொள்ள வேண்டியவை தொடர்பிலான இலங்கை அரசாங்கத்தின் தேசப்பற்றுச் சட்டத்துக்காக இந்த படிப்பினையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இலங்கையில் தேசப்பற்றுச்சட்டம் விரைவில் நிறைவேற்றப்படவுள்ளது.

அமெரிக்காவின் தேசப்பற்றுச்சட்டத்தின் வழிகாட்டுதலுக்கு அமையத்தான் தற்போதைய தேசப்பாதுகாப்பு படையணி உருவாக்கப்படுவதாக அமெரிக்கச் சட்டத்தை ஆராய்ந்து வரும் அரசாங்கக் குழு உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டினார். (க)

## உணவுப்பொருள் விநியோகத்துக்கு தடைவிதிக்க நீதிமன்றம் மறுப்பு!

(கொழும்பு)

இராணுவத்துக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகத்துக்கு தடை விதிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் மறுத்துள்ளது.

பண்டாரவளையைச் சேர்ந்த அமீஸ் சகோதரர்கள் நிறுவனத்தினர் இது தொடர்பாக நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர்.

அதில் இராணுவத்துக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான ஒப்பந்தம் நடத்தப்பட்டதில் முறைகேடுகள் நடந்துள்ளதால் இந்தப் பொருட்கள் விநியோகத்துக்குத் தடை விதிக்க கோரி வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் இராணுவத் தளபதி, திறைசேரி செயலாளர்உள்ளிட்டோர் பிரதிவாதிகளாகச்சேர்க்கப்பட்டிருந்தனர். வழக்கை விசாரித்த நீதிபதிகள் கே. சிறீபவன் மற்றும் சிசி ர டி ஆப்ரியூ தடை விதிக்க மறுத்து தீர்ப்பளித்தனர். (க)

## 5கோடிக்கும் மேற்பட்ட சொத்துக்கள் நாசம்

(மன்னார்)

பேசாலை வங்காலைப் பகுதிகளில் கடற்படையினர் கடந்த சனிக்கிழமை நடத்திய வெறியாட்டத்தில் 5 கோடி ரூபா வுக்கும் மேற்பட்ட சொத்துக்கள் அழித்தொழிக்கப்பட்டுள்ளன.

பேசாலையில் 30 இற்கு மேற்பட்ட படகுகளும் 25 வாடிகளும் எரிக்கப்பட்டுள்ளன.

இந்த வாடிகளுக்குள் வலைகள் வெளியிணைப்பு இயந்திரங்கள் போன்ற பல இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த தொழிலுபகரணங்கள் இருந்தன. இவ்வாறே வங்காலைப்பாட்டிலும் பல மீன்வாடிகள் எரியூட்டப்பட்டுள்ளன. (க)




# பிரான்ஸ்-தென்கொரியா ஆட்டம் சமநிலையில் முடிவு

பிரான்ஸ், தென்கொரியா அணிகள் மோதிய லீக் போட்டி சமனிலையில் முடிந்தது. முதல் பாதியில் கோல் அடித்த பிரான்சின்வெற்றிக் கனவை, இரண்டாவது



பாதியில் தென்கொரியா தகர்த்தது. இதன் மூலம் தொடர்ந்து இரண்டு லீக் போட்டி களிலும் முன்னணி அணியானபிரான்ஸ் 2 புள்ளி கள் மட்டுமே பெற்று பின் தங்கியுள்ளது.

ஜேர்மனியில் நடந்து வரும் உலகக் கோப்பை உதைபந்தாட்ட தொடரில் நேற்று முன்தினம் பிரான்ஸ், தென்கொரியா அணி கள் மோதின. குழு 'ஜி' பிரிவின் முதல் லீக் போட்டியில் தென்கொரியா ஒருவெற்றியையும், பிரான்ஸ் சமநிலையையும் பதிவு செய்து இருந்தது. தென்கொரியாவுடனான இப் போட்டியில் வெற்றிபெற்றாக வேண்டிய கட்டாயத்தில் களம் இறங்கியது பிரான்ஸ். போட்டியின் முதல் பாதியில்பிரான்ஸ்ஆட்டத்தை தன்கையில் எடுத்துக் கொண்டது. ஆட்டத்தின் 9வது நிமிடத்தில் சில்வைன் வில் டர்ட் அழகாக பாஸ் கொடுக்க, அதை பெற்றுக் கொண்ட தியரி ஹென்றி முதல் கோலை அடித்தார். தொடர்ந்து அபாரமான ஆட்டத் தை பிரான்ஸ் வீரர் கள் வெளிப்படுத் தினர். 28வது நிமிடத் தில் பேட்ரிக்கின் உதவி யோடு கோல் அடிக்க முயன்ற ஹென்றியின் கனவு கைநழுவியது. ஆட்டத்தின் 26 மற்றும்



37வது நிமிடங்களில் தென் கொரிய அணிக்கு இரண்டுபிறி-கிக்வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் கொரியவீரர்கள் அதை நழுவவிட்டனர். முதல் பாதியின்கடைசிநேரத்தில்பிரேசிலுக்கு மற்றொரு அருமை யான வாய்ப்பு அமைந்தது. 32வது நிமிடத் தில் கோர்னரில்இருந்து ஜிடேன் அடித்த பந்தை, பேட்ரிக் தலையால் முட்ட அதுகோல் எல்லையின் மிக அருகில் சென்றது. இமைப் பொழுதில் அதைத் தடுத்தார் தென்கொரிய கோல்கீப்பர் லீவூன் -ஜா. இரண்டாவது பாதியில் பிரான்சின் ஆட்டத்துக்கு சரியான பதிலடிகொடுத்ததுதென்கொரியா.

தொடர்ந்து முயன்று வந்த தென்கொரியாவின் போராட்டத்துக்கு81வது நிமிடத்தில் பலன் கிடைத்தது. கோஜின்-ஜா துல்லிய மாக தலையால் அடிக்க, பார்க்-ஜி-சங் அதை அருமையாக கோல் செய்தார். இறுதி யில் பிரான்ஸ் கோல் அடிக்க கடும் முயற்சிசெய்தும் முடியவில் லை. ஆட்டநேர முடி வில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடிக்க போட்டி சமநிலையில் முடிந்தது. இதன் மூலம் இரண்டு லீக் போட்டி களிலும் பிரான்ஸ் வெற்றியை எட்டமுடிய வில்லை. இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வழங்கப் பட்டது.

# விறுவிறுப்பான ஆட்டத்தில் ஆஸியை வென்றது பிரேஸில்

விறுவிறுப்பாக நடைபெற்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான லீக் போட்டியில் நடப்பு சம்பியனான பிரேசில் 2-0 என்றகோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. பிரேசில் அணி வீரர்களான அட்ரியனோ, பிரட் இருவரும் கலக்கலாக ஆடி அணிக்கு வெற்றி தேடித் தந்தனர். ஜேர்மனியில் 18வது உலகக்கோப் பை தொடர் நடக்கிறது. பிரேசில், அவுஸ்திரே லியா அணிகள் மோதிய லீக் போட்டிநேற்றுமுன் தினம் முனீச்சில் நடந் தது. முதல் . போட்டியில் ஜப்பானை வீழ்த்திய தால் நம்பிக்கையுடன் களமிறங்கியது அவுஸ்திரேலியா. பிரேசிலை பொறுத் தவரை குரோஷியாவை முதல் போட்டியில் போராடி வீழ்த்தி இருந்தது. பலம் வாய்ந்த



இருஅணிகள் மோதுவதால் ரசிகர்களின் பெரும் வரவேற்புடன் போட்டி ஆட்டத்தின் இரண்டாவதுநிமிடத்திலேயேஆரம்பமானது.

பிரேசிலுக்கு கிடைத்தது பிறி-கிக் வாய்ப்பு. ஆனால் அதை காக்கா நழுவ விட்டார். 10வது நிமிடத்தில் நட்சத்திர வீரர் றொனால்டோ, அவுஸ்திரேலியாவின் வின்ஸ் கெரல்லா வால் காலில் பலமாக தாக்கப்பட லேசான காயம் ஏற்பட்டது. இந்த போட்டியிலும் றொனால்டோ பதட்டத்துடனே காணப்பட்டார். ஆட்டத்தின் 27மற்றும் 40 வது நிமிடத்தில் அவருக்குக்கிடைத்த வாய்ப்புக்களைதவற விட பிரேசில் முதல் பாதியில் கோல் எதுவும் அடிக்காமல் இக்கட்டானநிலையை அடைந்தது. அவுஸ்திரேலிய அணியைப் பொறுத் தவரை பிரேசில் கோல் அடித்து விடக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தது. குறிப்பாக றொனால்டோவை சுற்றி பாது காப்பை பலப்படுத்தியது அவுஸ்திரேலியா. இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமானது. ஆட்டம்ஆரம்பித்த 4வது நிமிடத்தில்பிரேசில் வீரர் அட்ரியானோ அற்புதமாக முதல் கோலை அடித்தார். நட்சத்திரவீரர் றொனால் டோ தடைகளை மீறி கொடுத்த அழகானபாஸைபெற்றுக்கொண்ட அட்ரியானோ பதி வான சோட்டில் அடிக்க பிரேசிலின் நீண்ட போராட்டத்துக்கு பலன் கிடைத்தது.

குரோஷியாவுக்கு எதிரான முதல் போட்டியில் 69வது நிமிடத் தில் வெளியேறிய றொனால்டோ, இப் போட்டியில் 72 வது நிமிடத்தில் வெளியேறினார். அவருக்கு பதிலாக மாற்று வீரராக ராபின்ஹோ களமிறங்கினார். பிரேசிலுக்கு பதிலடி கொடுக்கஅவுஸ்தி ரேலிய அணியினர் எவ்வளவோ போராடினர். ஆனால் பலன் கிடைக்க வில்லை. அவுஸ்திரேலிய கோல் கீப்பர் மார்க் சுவார்சர் சிறப்பாக செயல்பட்டார். முன்னணிவீரர்களானநீல், எமர்டன் ஆகியோரின் கோல் அடிக்கும் முயற்சி வீணானது. ஆட்டத்தின் 88 வது நிமிடத்தில் பிரேசில் வீரர் அட்ரியனோ வெளியேறஅவருக்குப் பதிலாக பிரட் வந்தார். களமிறங்கிய சிறிது நேரத்தில்பிரட் டுக்கு கிடைத்தது சூப்பர் வாய்ப்பு. 90வது நிமிடத்தில் ராபின்ஹோ கோல் எல்லையை நோக்கி அடிக்க, அருகில்இருந்தபிரட் எளிதாககாலில் அடிக்கஅது கோலாக மாறியது. இறுதியில் பிரேசில் அணி 2-0என்ற கோல் கணக்கில்அபாரவெற்றிபெற்றதுதொடர்ந்துஇரண்டு லீக் போட்டிகளில் பெற்றிபெற்ற பிரேசில் 6புள்ளிகள் பெற்றுள்ளது. இப் போட்டியில் தோல்வி அடைந்த அவுஸ்தி ரேலி யா, குரோஷியாவுக்கு எதிரான மூன்றா வது லீக் போட்டி களில் வெற்றி பெற வேண் டிய நிலையில் உள்ளது.

# கடுமையான போராட்டத்தின் பின் குரோஷியா-ஜப்பான் ஆட்டம் சமநிலையில்

ஜப்பான், குரோஷியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது லீக்போட்டி, இரு அணி வீரர்களின் கடுமையான போராட்டத்துக்கு பின் போட்டி சமநிலையில் (0-0) முடிந்தது. குரோஷிய அணி பெனால்டி வாய்ப்பை வீணாக்கி, வெற்றியை நழுவவிட்டது. உலக கோப்பை உதைபந்தாட்ட தொடர் ஜேர்மனியில் நடக்கிறது. ஜப்பான், குரோஷி யா அணிகள் மோதிய லீக் போட்டி நியூரம் பர்க்கில் நேற்றுமுன்தினம்நடந்தது. முதல் போட்டியில் ஜ ப் பா ன் - அ வு ஸ் தி ரே லி யா வி ட மும், குரோஷியா- பிரேசிலிடமும் தோல்வி அடைந்திருந்தது. இப்போட்டியில்வெற்றி பெறும் அணிக்கே இரண்டாவது சுற்றுக்குள் நுழைய வாய்ப்புக் கி[illegible]ம் என்பதால் இரு அணி களும் பரபரப்புடன் களமிறங்கின. ஆட்டத் தின முதல் பிறி-கிக் வாய்ப்பை(2வது நிமிடம்) ஜப்பானும், கோர்னர்வாய்ப்பை(3வதுநிமிடம்)குரோஷியாவும் பெற்றன. ஆனால் இரு அணி களும் கோல் போடவில்லை. 20வது நிமிடத் தில் குரோஷிய வீரர் ப்ர்சா,ஜப்பானின் மியாமோட்டாவால்பெனால்டி ஏரியாவில் முரட்டுத் தனமாக தடுக்கப்பட, குரோஷியாவுக்கு கிடைத் தது பெனால்டி சந்தர்ப்பம். குரோஷிய வீரர் டாரிஜோசர்னாவுக்கு கோல்அடிக்கும்வாய்ப்புவழங்கப்பட்டது.

டாரிஜோ அடித்தசொட்டை, கண் இமைக் கும் நேரத்தில் பாய்ந்து வந்து தடுத்தார் ஜப்பான் கோல் கீப்பர் காவாகுச்சி. அரியவாய்ப்பை நழுவவிட்டதால் குரோஷிய வீரர்கள் சோகமடைந்தனர். முதல் பாதியில் குரோஷிய அணிக்கு கோல் அடிக்க பல வாய்ப்புக்கள் கிடைத்தது. மூன்று முறை (33, 39, 42வது நிமிடம்) குரோஷிய வீரர்கள் அடித்த சொட் கோல் கம்பத்தில் பட்டு வெளியேறியது. இது போதாதென்று ஜப்பான் அணியின் கோல் கீப்பர் காவாகுச்சிதுடிப்புடன்செயல்பட்டார். அவரைமீறி பந்து கோல் எல்லைக்கு செல்ல வே முடியவில்லை. முதல்பாதியில் இருஅணி களும் கோல் எதுவும் அடிக்காமலேயேவெளி யேறின. இரண்டாவது பாதியில் ஆட்டம் பர பரப்பான கட்டத்தை எட்டியது. எப்படியாவது கோல் அடித்து விடவேண்டும் என இரு அணி வீரர்களும் கடுமையாகப் போராடினர். ஆட்டத்தின்49வது நிமிடத்தில் ஜப்பான் வீரர் காஜிஸ், யானகிசவாவிடம் அருமையான பாஸ் கொடுத்தார். இந்த வாய்ப்பும் கைநழு வியது. தொடர்ந்து 55வது நிமிடத்தில் ஜப் பான் வீரர்நகுமாரா கோல் லைனை நோக்கி அடித்த சூப்பர்சொட் குரோஷிய கோல்கீப்ப ரிடம் தஞ்சம் புகுந்தது. இரண்டாவது பாதியில் ஜப்பானுக்கு இரண்டு பிறி-கிக் வாய்ப்புகள் கிடைத்தன. இதனை ஜப்பான் வீரர்கள் நழுவவிட்டனர். இறுதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காமலேயே ஆட்டத் தை முடித்தன. இதன்மூலம் இரு அணிகளுக் கும் உலக கோப்பை தொடரின் இரண்டாவது சுற்றுக்குள் நுழைய வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளது.

அமிர்தன்

# அணிகள் பெற்ற புள்ளிகளின் அட்டவணை

| குழு-ஏ | ஆட்டங்கள் | வெற்றி | சமநிலை | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1.ஈகுவாடர் | 2 | 2 | 0 | 0 | 6 |
| 2.ஜேர்மனி | 2 | 2 | 0 | 0 | 6 |
| 3.போலந்து | 2 | 0 | 0 | 2 | 0 |
| 4.கோஸ்சாரிக்கா | 2 | 0 | 0 | 2 | 0 |
| **குழு-பி** | | | | | |
| 1.இங்கிலாந்து | 2 | 2 | 0 | 0 | 6 |
| 2.சுவீடன் | 2 | 1 | 1 | 0 | 4 |
| 3.டிரினிடாட் | 2 | 0 | 1 | 1 | 1 |
| 4.பராகுவே | 2 | 0 | 0 | 2 | 0 |
| **குழு-சி** | | | | | |
| 1.ஆர்ஜென்டீனா | 2 | 2 | 0 | 0 | 6 |
| 2.நெதர்லாந்து | 2 | 2 | 0 | 0 | 6 |
| 3.ஐவரிக்கோஸ்ற் | 2 | 0 | 0 | 2 | 0 |
| 4.செரிபியா | 2 | 0 | 0 | 2 | 0 |
| **குழு-டி** | | | | | |
| 1.போர்த்துக்கல் | 2 | 2 | 0 | 0 | 6 |
| 2.மெக்சிக்கோ | 2 | 1 | 1 | 0 | 4 |
| 3.அங்கோலா | 2 | 0 | 1 | 1 | 1 |
| 4.ஈரான் | 2 | 0 | 0 | 2 | 0 |
| **குழு-ஈ** | | | | | |
| 1.இத்தாலி | 2 | 1 | 1 | 0 | 2 |
| 2.செக்குடியரசு | 2 | 1 | 0 | 1 | 3 |
| 33.கானா | 2 | 1 | 0 | 1 | 3 |
| 4.அமெரிக்கா | 2 | 0 | 1 | 1 | 1 |
| **குழு-எவ்** | | | | | |
| 1.பிரேஸில் | 2 | 2 | 0 | 0 | 6 |
| 2.அவுஸ்திரேலியா | 2 | 1 | 0 | 1 | 3 |
| 3.குரோஷியா | 2 | 0 | 1 | 1 | 1 |
| 4.ஜப்பான் | 2 | 0 | 1 | 1 | 1 |
| **குழு-ஜி** | | | | | |
| 1.தென்கொரியா | 2 | 1 | 1 | 0 | 4 |
| 2.பிரான்ஸ் | 2 | 0 | 2 | 0 | 2 |
| 3.சுவிஸ்சர்லாந்து | 1 | 0 | 0 | 1 | 1 |
| 4.டோகா | 1 | 0 | 1 | 1 | 0 |
| **குழு-எச்** | | | | | |
| 1.ஸ்பெயின் | 1 | 1 | 0 | 0 | 3 |
| 2.சவூதிஅரேபியா | 1 | 0 | 1 | 0 | 1 |
| 3.ருனிசியா | 1 | 0 | 1 | 0 | 1 |
| 4.உக்ரைன் | 1 | 0 | 0 | 1 | 0 |

# இலங்கை நேரப்படி இன்றைய போட்டிகள்

| அணிகள் | இடம் | நேரம் |
|---|---|---|
| ஈக்வடார் – ஜெர்மனி | பெர்லின் | 7.30 |
| கோஸ்டோரிலா –போலந்து | ஹானோவர் | 7.30 |
| சுவீடன் – இங்கிலாந்து | கோலேஞ் | 12.30 |
| பராகுவே–டிரினிடேட் | கைசெர்சலூட்ரன் | 12.30 |

# கணினிக் கல்விப் பகுதி

## இணையத்தில் தகவல்களையும் படங்களையும் தேடுதல் 06

இணையத்தில் பல தகவல்கள் கொட்டிக் கிடக்கிறது. அதில் எமக்குத தேவையான சில தகவல்களை தேடி எடுக்க பல தேடல் பொறிகள் காத்திருக் கின்றன. உதாரணமாக உலகின் மிகச் சிறந்த தேடல் இயந்திரமாக Google, Yahoo, MSN, மற்றும் altavista போன்ற பிரபல தளங்களை குறிப்பிடலாம். இதனைத் தவிர நூற்றுக்கு மேற்பட்ட தேடல் இயந்திரங்கள் இருந்தாலும் அவற்றின் தேடல் வேகம் மிகமிகக் குறைவாகவே இருக்கும்.

**இணையத்தில் தகவல்களை தேடுவது எப்படி எனப் பார்ப்போம்.**

இணைய மயமான இவ்வுலகில் சகல தகவல்களையும் ஒரு நொடிப் பொழுதில் நமக்கு தருவது இணையம் மட்டுமே. அதற்கு அடுத்தபடியாகவே தொலைக்காட்சி, தொலைபேசி மற்றும் வானொலி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இப்படிபபட்ட இணையத்தில் எமக்குத் தேவையான சில தகவலைத் தேடுவது மிகமிக எளிதாகும்.

உதாரணமாக, எமக்கு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினுடைய இணையத்தள முகவரி எமக்குத் தேவையெனின் மேற்குறிப்பிட்ட ஏதாவ தொரு தேடல் இயந்திரத்திலுள்ள தேடல பொக்ஸ்க்குள (Search box) ``Department of Examinations''-Sri Lanka என ரைப் செய்து Search என்பதை கிளிக் செய்ததும் இலங்கை பரீட்சை திணைக்களத்தினுடைய இணையத்தள முகவரிகளை காண்பிக்கும். அதில் எமக்குத் தேவையான முகவரி மீது கிளிக் செய்வதன் மூலம் குறிப்பிட்ட தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.

அதேபோல இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினுடைய இணையத தள முகவரி அல்லது அதனுடன் தொடர்புபட்ட தகவல்களை பெறுவதற்கு தேடல் இயந்திர தேடல் பொக்ஸ்க்குள் ``Sri Lanka Open Universities'' எனக் கொடுத்து ஐந்தே வினாடிகளில் இலங்கை திறந்த பல்கலைக்கழகங்களின இணையத்தள முகவரிகளை பட்டியலிடத் தொடங்கும். அதில் நாம் எதிர்பார்த் திருந்த பல்கலைக்கழகத்தின் இணையத்தள முகவரியையும் பல்கலைக் கழகங்களின் பெயரையும் காண்பிக்கும் தேவையான முகவரி மீது மவுசால் ஒருமுறை கிளிக செய்வதன் மூலம் குறிப பிட்ட இணையத்தள முகவரிக்குச் செல்ல முடியும்.


கணினிக் கல்வி



கே.ரி.சாரங்கன்


யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

Email: kt.sarangan@gmail.com



இப்படி பல தகவல்களை தேடிப் பெற்றுக்கொள்ளலாம். அதே வேளை கீழ்த்தரமான தளங்களையும் இவ்வாறு தேடிப் பெற்றுக்கொள்ளலாம். இதனால் நம் இளைய சமூகம் பாதிப்படைகிறது. இணையத்தில் ஆபாச படங்களை வெளியிடுவதைத் தடுக்க முடியாது. ஆனாலும் நமது கணினியில் அல்லது அலுவலக கணனியில் ஆபாச படங்களை பார்ப்பதை தவிர்க்க முடியும். இதற்கு சிறந்த பில்ட்டரை நிறுவுவதன் மூலம் நமது சமூகத்தை பாதுகாத்துக்கொள்ளலாம்.

**இணைய முகவரிகளை தேடிப் பெறுவது பற்றிப் பார்த்தோமல்லவா? அதேபோல இணையத்தில் ஒரு படத்தைத் தேடிப் பெறுவது எப்படி எனப் பார்ப்போம.**

எமக்கு இந்தியப் பிரபலங்களின் படங்கள் மற்றும் படத் தகவல்கள தேவையென்றால் ஒவ்வொரு இணையத்தளங்களிற்கும் சென்று படம் உள்ளதா? படத் தகவல்கள் உள்ளதா? எனத்தேடத் தேவையில்லை. தேடல் இயந்திரத்தில் Image (படத் தேடல்) என்பதை தெரிவுசெய்து விட்டு எமக்கு தேவையான படத்தின் பெயரை தேடல் பொக்ஸ்க்குள் (Search Box) தேடுக என்பதை கிளிக செய்த மறுகணமே படங்களும் படத்தகவல்களும் வந்து குவியும்.




உதாரணமாக நடிகர் விஜய் படம் தேவையென்றால் தேடல் இயந்திரத்தில் Image என்பதை தெரிவு செய்த பின் Actor Vijay எனக் கொடுத்து தேடினால நூற்றுக்கும் மேற்பட்ட விஜய் படங்கள் காட்சியளிக்கும். பின் விரும்பிய படத்தை நமது கணினியில் பதிந்து கொள்ள லாம். அழகிய பூக்களின் படங்கள் தேவையென்றால் 'Flowers' எனத தேடினால் பூக்களினது படங்களை வரிசைப்படுத்திக்கொண்டே இருக்கும். இப்படி பலவிதமான தேடல்களை மேற்கொண்டு நமது தேவைகளை இணையத்தில் பூர்த்தி செய்யலாம்.




### இமெயில் அக்கவுண்ட (Email Account) வகைகள

*இமெயில் அக்கவுண்ட் இரு வகைப்படும். அதில் ஒன்று*

1. வெப்பை அடிப்படையாக (Web Base Mail) வைத்து செயற்படும் இமெயில்.

2. இமெயில் சொப்ட் வெயார் களைப் பயன்படுத்தி இமெயிலை கையாளுதல்.

*இது இரண்டைப் பற்றியும் விரிவாகப் பார்ப்போம்.*

◆ வெப்பை அடிப்படையாக வைத்து இயங்குவதென்றால் Internet Connection இருந்தால் மட்டுமே எமது இமெயிலினை கையாளலாம். இந்த சேவையை பெரும்பாலும் அனைத்து இமெயில் முகவரியையும் செயற்படுத்தலாம். உதாரணத்திற்கு Yahoo, Hotmail போன்ற இலவச இமெயில் சேவையை குறிப்பிடலாம். இணைய இணைப்பு துண்டிக்கப்பட்ட பின் இமெயிலினை செயற்படுத்த முடியாது. ஆனால்,

◆ இமெயில் சொப்ட் வெயார்களை பயன்படுத்தி சில இமெயில்களையே செயற்படுத்தலாம். இணைய இணைப்பு இல்லாத சமயத்தில் இமெயிலினை பார்க்கக்கூடியதாக இருக்கும். இதற்காக பல Softwareகள் காலத்திற்கு காலம் வெளிவந்தாலும் பெரும்பாலானவர்கள் பயன்படுத்துவது MS Outlook ஐயேயாகும். இவ்அவுட்லுக்-மூலம் இமெயில்களை செயற்படுத்தும் வசதியை Gmail மற்றும் ISP யினால் வழங்கப்படும் இமெயில் முகவரிகளை அவுட்லுக் மூலம் கையாளலாம்.

ISP எனும் போது இணைய இணைப்பு வழங்குனராலேயே இலவசமாக வழங்கப்படும் இமெயில் முகவரியாகும்.

Outlook அல்லது வேறு இமெயில் சொப்ட்வெயாரை பயன்படுத்துவதன் பிரதான நோக்கம் செலவின்மை ஆறுதலாக மெயில்களை பார்க்கலாம். ஆனால் வெப் மெயில்கள் இணைய இணைப்பு இருந்தால் மட்டுமே செயற்படுத்த முடியும் இதனால் பணம் செலவாகும .

(தொடரும்..)

***வாசகர்களே !***

தங்களது கேள்வி - பதில் பிரிவுக்கான பல கேள்விகளை தபாலிலும் மின்னஞ்சல் வாயலாகவும் அனுப்பிகொண்டே இருக்கிறீர்கள். நீங்கள் அனுப்பிய கேள்விகளுககு அடுத்த கணினிக் கல்விப் பகுதியிலிருந்து பதில் வெளிவரும் என்பதை தெரிவித் துக கொள்கிறோம். எமது கணினிக் கல்விப் பகுதிக்கு வாசகர் வழங்கும் ஆதரவுக்கு நன்றி.

உங்கள் கணினிக் கல்விக்கான கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:

கணினிக் கல்விப் பகுதி

வலம்புரி- சங்குநாதம்

இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

## கலக்கல் மொபைல் போன்



தகவல் தொடர்பு வசதிகள் அதி வேகமாக வளர்ந்து வருகிறது. இதற்கு ஏற்ப தகவல் தொடர்பு கருவிகளும் புதிது புதிதாகதயாரித்து வருகின்றனர். இதில் மொபைல் போன் எனப்படும் போன்கள் தயாரிப்பில் பல புதுமைகள் புகுத் தப்பட்டு வருகிறது. சாதாரணமாக பேசுவதற்கு என்று தயாரிக்கப்பட்ட மொபைல் போன்கள் தற்போது ஒரு மினி கம்பியூட்டர் ஆகவே வலம் வரு கின்றன. மொபைல் போனில் எப்.எம். ரேடியோ கேட்கலாம், வீடியோ .காட்சி களை பார்த்து மகிழலாம், இணைய தளத்தில் உலாவி மின் அஞ்சல்கள் அனுப்பலாம், பெறலாம் மற்றும் நமக்கு தேவையான தகவல்களை இணையதளத்தில் இருந்து இறக்குமதி செய்யலாம்.

ஜப்பான் நாட்டில் உள்ள ஷார்ப் நிறுவனம் தற்போது அது நவீன மொபைல் போன் ஒன்றை தயாரித்துள்ளது . இது இண்டல் பி.எக்ஸ்.ஏ.270 ரக பிராசசர் கொண்டது. விண்டோஸ் மென்பொருள் மூலம் இது இயங்கும் தன்மையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு கம்பியூட்டரில் உள்ள வசதிகள் அனைத்து ம் இந் த மொபைல் போனில் இடம் பெற்றுள் ளது . இது தவிர சிறிய விசைப்பலகை ஒன்றும் இதில் உண்டு.விரைவில் விற்பனைக்கு வர இருக்கும் இந்த மொபைல் போனின் விலை 45 ஆயிரம் ரூபாய்கள் தான்.

## சூரிய ஒளியில் இயங்கும் பல்ப்




நாம் எவ்வளவோ துறைகளில் முன்னேறி விட்டோம் என்று சொன்னாலும் கூட ஒரு சில இடங்களில் இன்றும் மின்சார வசதி இல்லாமல் கஷ்டப் படுகிறார்கள். அவர்களுக்கு ஒரு வரப் பிரசாதமாக சூரிய ஒளியில் இயங்கக் கூடிய பல்ப் ஒன்றை ஜெர்மன் நாட்டை சேர்ந்தவர் கண்டு பிடித்துள்ளார்.

திபெத்திய நாட்டின் தலைநகரத்தில் இருந்து 270 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள சானான் என்னும் ஊரில் உள்ள 38 வீடுகளில் இந்த பல்ப் பயன்படுத்தப்படுகிறது. அந்த ஊரில் வசிப்பவர்களின் ஆண்டு வருமானம் மிக மிக குறைவு. அவர்களால் மின் சாதனங்களை பயன்படுத்துவது மிக மிகக் கஷ்டம். இந்த பல்ப் அவர்களுக்கு மிகவும் பயன் அளிப்பதாக உள்ளது .

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 02

முருக-தனுஷ்கோடி



### காமராஜ் ஒரு பாடம்

சிறிது காலம் கழித்து ஏனாதி நாயனார் வித்தியாசாலாவில் காமராஜ் சேர்க்கப்பட்டார் முருகையா என்ற ஆசிரியர் இந்தப் பள்ளியை நடத்தி வந்தார். தமிழில் எழுதப்படிக்க இந்தப் பள்ளில் தான் காமராஜ் கற்றுக்கொண்டார் காசிக்கடைத் தெருவில் இருந்த இந்தப் பள்ளியில் இருந்து அடுத்த ஆண்டில் காமராஜை விருதுப்பட்டி உயர் நிலைப்பள்ளியான சத்திரியா வித்தியாசாலாவில் சேர்த்தனர் விருதுப்பட்டியில் சத்திரிய வித்தியாசாலா ஒன்றுதான் உயர்நிலைப்பள்ளியாகும் பள்ளியிறுதி வகுப்பு வரை படிக்கக்கூடிய அளவுள்ளஇந்தப் பள்ளியில் இப்போது 2 ஆயிரத்தும் அதிகமான மாணவர்கள் படித்து வருகின்றனர். "பிடி அரிசிப் பள்ளிக்கூடம் என்று அப்போது இந்தப் பள்ளி எல்லோராலும் அழைக்கப்பட்டது. கூட்டுறவுக்கு இலக்கணமாய்த் திகழ்ந்த இந்தப் பள்ளியில் 1888ஆம் ஆண்டில் இருந்தே இலவசக்கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. விருதுப்பட்டியில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் இப்பள்ளிக்கு நாள்தோறும் பிடி அரிசியை (கைப்பிடி அளவு அரிசி) இலவசமாகத் தந்தனர். இதனால் தான் இந்தப் பள்ளிக்குப் பிடி அரிசிப்பள்ளி என்று பெயர் வந்தது.

இது தவிர மகமை மூலமும் பண வசூல் செய்து இந்தப் பள்ளியை நடத்தினார்கள் ஆகவேதான் இப்பள்ளியில் 1888ஆம் ஆண்டில் இருந்தே இலவசக் கல்வி வழங்கப்பட்டது. காமராஜ். முதல்வரானதும் நாடு முழுவதும் உயர்நிலைப் பள்ளிகளில் இலவசக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்து மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளித்தார். காமராஜ் படித்த சத்திரிய வித்தியாசாலாதான் இலவசக் கல்விக்கு முன்னோடியாகும் தான் படித்த பள்ளியையே பாடமாகக் கொண்டு கனவை நனவாக்கி இலவசக் கல்வி தந்து நாட்டுக்கே பாடமாகி கல்விக்கண் தந்த காமராஜ் ஆனார் தலைவர்.

### விளையும் பயிர் முளையிலே தெரியும்

காமராஜின் ஆறாவது வயதில் சத்திரிய வித்தியாசாலாவில் சேர்ந்த ஓர் ஆண்டில் ஒரு நாள் பிற்பகல்....! அவரது தந்தை குமாரசாமி தாளாத தலைவலியால் துடித்துப்போய்ப்படுக்கையில் படுத்தார். மறு நாள் ... அவர் காலமாகிவிட்டார். தேங்காய் மொத்த வியாபாரம் செய்து குடும்பத்தை நடத்தியவரின் திடீர் மறைவு சிவகாமி அம்மையாரை அதிர்ச்சியிலும் தாங்க முடியாத வேதனையிலும் தள்ளியது. சோகச் சூழலில் சிக்கித் தவித்த தாயாரை அதிலிருந்து மீட்கும் பக்குவம் அந்த வயதில் காமராஜுக்கு இல்லை குடும்பத்துக்கு ஏற்பட்ட பெரிய இழப்பையும் உணர்ந்து கொள்ள அந்தப் பிஞ்சு மனத்தால் முடியவில்லை.காமராஜின் தாத்தா சின்னப்ப நாடார் காலமாகிச் சிறிது காலம்தான் ஆகியிருந்தது. தொடர்ந்து நிகழ்ந்து விட்ட காமராஜின் தந்தை மறைவால் அந்தக் குடும்பம் செய்வதறியாது திகைத்தது.அந்தக் குடும்பத்தின் ஒரே நம்பிக்கை நட்சத்திரமாகக் காமராஜ்தான் இருந்தார்.விருதுப்பட்டியில் காமராஜின் தாய் மாமன் கருப்பையா நாடார் ஜவுளிக்கடை நடத்தி வந்தார். காமராஜ் குடும்பத்துக்கு உதவுவது அவரது கடமை ஆயிற்று.

காமராஜ் படித்த சத்திரிய வித்தியாசாலாவில் பிள்ளையார் சதூர்த்தி கொண்டாடினார்கள் பள்ளியில் அப்போது விசேஷ பூஜைகள் நடக்கும் மாணவர்கள் இந்த விழாவில் குதூகலமாகக் கலந்து கொள்வார்கள் பூஜைக்கு வரும் மாணவர்களுக்குப் பிரசாதம் வழங்கப்படும். ஒவ்வொரு மாணவனிடமும் இந்தப் பூஜைக்காகக் காசு வசூலிக்கப்படும் அன்று நடந்த பூஜைக்கு எல்லா மாணவர்களும் ஒன்றரை அணா கொடுத்தார்கள். காமராஜரும் தம் பங்குக்கு ஒன்றரை அணா கொடுத்தார் பூஜைக்குக் காமராஜும் போய்ச்சாமி கும்பிட்டார் பூஜை முடிந்ததும் எல்லோருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. எல்லோரும் வரிசையாக நின்றுதான் வாங்கவேண்டும் என்று கடும் உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. ஆனால் மாணவர்களோ ஒருவரை ஒருவர் முண்டியடித்துக்கொண்டு பொரி கடலை தேங்காய் பழம் பேரிக்காய் ஆகிய வைகளை வாங்குவதில் ஈடுபட்டனர். வாங்கிய பிரசாதத்துடன் கலகலப்பாக மாணவர்கள் வீட்டுக்குப் போனார்கள். முண்டியடித்துப் பிரசாதம் வாங்கிய மாணவர் கூட்டத்தில் காமராஜ் சிக்க வில்லை தனியே ஒரு மூலையில் அவர் ஒதுங்கி நின்றார்.

நம் பங்குக் ஒன்றை அணா கொடுத்துத்தானே இருக்கிறோம் அதற்குரிய பங்கு கிடைக்காமலா போய் விடும் என்று எண்ணி ஒதுங்கியே நின்றார் கூட்டம் குறைய ஆரம்பித்ததும் பிரசாதம் வழங்கியவர்கள் கண்ணில் காமராஜ் பட்டார் அவருக்குக்கிடைத்ததோ சிறிதளவு பிரசாதம்தான் அதிலும் சில வகைகள் இல்லை. கிடைத்த் பிரசாத்துடன் வீட்டுக்குப் போனனர் காமராஜர் பேரன் கொண்டுவந்திருந்த பிர சாத்தைப் பார்த்தார். பாட்டி பார்வதி அம்மாள் எல்லாரும் நிறைய வாங்கிட்டு வந்திருக்காங்க. நீ மட்டும் ஏண்டா குறையா வாங்கிட்டு வந்திருக்கிறாய்? என்று கேட்டார். பாட்டி என்னையும் சண்டை போட்டுக்கிட்டு வாங்கச் சொல்றியா பாட்டி? எல்லாப் பையன்களையும் போல நானும்தான் ஒன்றரை அணாக் கொடுத்தேன். எனக்கு மட்டும் ஏன் குறைச்சுத் தங்தாங்க? என்று பாட்டியிடம் கூறினார். காராஜ் எப்படியோ கண்ணா நீயும் மற்றவங்களைப் போல முந்தி வாங்கி இருக்கணும் என்று பேரனைப் பார்த்துச் சொன்னார் பார்வதி அம்மாள் அது எப்படிப் பாட்டி? அவுங்களும் காசு கொடுத் தாங்க நானும் கொடுத்தேன். அவுங்க மாதிரி எனக்கும் தரணும்லியா? வாத்தியார் என் பங்கை ஒழுங்காகத் தரணுமா இல்லியா? என்று எதிர்கேள்வி போட்டதோடு காமராஜ் நிற்க வில்லை. ஏன் பாட்டி வாத்தியார் இதைப் பொறுப்பாய் செய்யணும்லியா ஏன் செய்யலே என்றும் தொடர்ந்து கேட்டார்.

காமராஜின் எதிர்க்கேள்விகளைக் கேட்டுவாய் அடைத்துவிட்டார் பாட்டி பார்வதி அம்மாள் காமராஜ் பேசியது பெரிய பேச்சு! அந்த மூதாட்டிக்கு அது புது அனுபவமாக இருந்தது மற்றச்சிறுவர்களின் தன்மையில் இருந்து தன் பேரன் வேறுபட்டு நின்றது பார்வதி அம்மாளுக்குப் புதுமையாக இருந்தது. இந்தச் சிறுவயதில் வழக்கத்திற்கு மாறாகக் காமராஜ் கையாண்ட முறை பாட்டியை ஆச்சரியப்படச் செய்தது. பதவிக்கும் அந்தஸ்துக்கும் அடிபிடி யாய் நிற்கும் பெரிய மனிதர்களைப் பின் காலத்தில் சாடிச் சமதர்மம் மலரத் தன் பேரன் அப்போதே கால்கோள் விழா நடத்தியிருப்பது அந்த மூதாட்டிக்கு அன்று தெரிந்திருக்க நியாயமில்லைதான்.

### சோதனையும் சாதனையும்

சோதனைகளையும் நெருக்கடிகளையும் சமாளித்து அரும்பெருங் காரியங்களைச் சாமர்த்தியமாகச் செய்தவர் தலைவர் காமராஜ் சாதாரண சமயத்தில் அமைதியான நிலையில் யாரும் தலைவராக இருந்துவிட முடியும் நெருக்கடி கிளர்ச்சி பிரச்சினை முதலியன மலிந்து கிடக்கும் சமயத்தில் பெரும் பொறுப்பு ஏற்றுத் தலைமை வகிப்பதுதான் எப்பேர்ப்பட்டவருக்கும் சிரமமான காரியம் அந்தச் சாதனையைப் பல முறை நிகழ்த்தியவர் தலைவர் காமராஜ் விருதுநகர் வீதியில் அவரது சிறுவயதில் ஏற்பட்ட அனுபவம் இதற்கு வித்திட்டு எடுத்துக்காட்டாக இருக்கிறது. என்றால் அது மிகையாகாது விருதுநகர் வீதியில் ஒரு நாள் கோவில் யானை பாகனுக்கு அடங்காமல் பிளிறிக் கொண்டு ஓடி வந்தது. வெங்கலக்கடைக்குள் யானை புகுந்தாற்போல் என்பார்களே அது அந்தக் கடை வீதியில் நடக்க இன்னும் கொஞ்ச நேரமே இருந்தது.

(தொடரும்)

## லெப்.நவீனகுமார் பாசறையில் கிராமியப் பயிற்சி நிறைவு





(கிளிநொச்சி)

தும்பங்கேணி, திக்கோடை காந்திபுரம், சுரவணையடியூற்று, இளைஞர் விவசாயத் திட்டம் ஆகிய கிராமங்களில் நேற்றுமுன்தினம் லெப் . நவீன்குமார் கிராமிய படையணி பயிற்சிப் பாசறையில் 450ற்கு மேற்பட்ட மக்கள் பயிற்சிகளை முடித்து வெளியேறியுள்ளனர்.

இந்நிகழ்வு கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் மட் தும்பங்கேணி கண்ணகி வித்தியாலயத்தில் வெல்லாவெளிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கமலக்கண்ணன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பொதுச் சுடரினை லெப் கேணல் ராஜன், பயிற்சிக் கல்லூரி ஆசிரியர் கீதன் மாஸ்ரர் ஏற்றி வைக்க தேசியக்கொடியினை மாவட்ட இரா ணுவப் புலனாய்வுத் துறைத் தளபதி பிரபா ஏற்றி வைத்தார் தொடர்ந்து ஈகச் சுடரினை வெல்லாவெளிக் கோட்டத் தளபதி கோணேஸ் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து பயிற்சியாளர்களின் விளையாட்டு போட்டிகளும் இடம்பெற்றன விளையாட்டுக்களில் முதலிடங்களை பெற்ற அணியினருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டது.

இதில் கிராமிய படையணி பயிற்சிக் கண்காணிப்பாளர் சந்திரமோகன் பட்டிருப்பு கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வா பயிற்சி ஆசிரியர் சதானந்தம் மற்றும் துறை சார்ந்தபொறுப்பாளர்கள் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (சு)

## வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் தடுக்கப்பட்டனர்

(மன்னார்)

மன்னாரில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் உயிலங்குளத்தில் வைத்து தடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

பாதுகாப்பமைச்சின் செயலாளரை இவர்கள் தொடர்பு கொண்ட போதும் அவர் பாதுகாப்பமைச்சின் பேச்சாளர் கெகலியரம்புக் வெலவைத் தொடர்பு கொண்டு தகவல்களைப்பெறும்படியும் அவர்கள் ஸ்தலத்துக்குச் செல்ல வேண்டிய தில்லை எனவும் பதிலளித்துள்ளார். (சு)

## அன்பு வாசகர்களே!

நயினாதீவு நாகபூசணி அம்பாளின்
வருடாந்த மஹோற்சவத்தை
முன்னிட்டு வலம் புரியில் இம்முறையும்

"நயினை நாகபூசணி அம்மன் பாமாலை"

வெளிவரும். நயினை அம்மனைத் துதி செய்யும்
உங்கள் பாமாலைகளை 8 வரிகளுக்கு உட்பட்டதாக எழுதி

நயினை நாகபூசணி அம்மன் பாமாலை
வலம்புரி
இல.03 இரண்டாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# பள்ளத்தில் விழுந்தது பஸ் 23 பயணிகள் பலி

ஜம்மு –காஷ்மீர் மாநிலம் ஜம்மு நகரிலிருந்து 157 கீலோ மீற்றர் தொலைவில் உள்ளது ராம்பன் ஏரியா . இதன் அருகே உள்ள ஜம்முஸ்ரீநகர் தேசிய நெடுஞ் சாலையில் நேற்று முன்தினம் காலை 8.05 மணியளவில் வேகமாக வந்துகொண்டிருந்த பயணிகள பஸ் ஒன்று டிரைவரின் கட்டுப் பாட்டை இழந்து சாலை ஓரம் இருந்த கிடு கிடுபள்ளத்திற்குள் விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 12 பேர் உடல்நசுங்கி பலியாகினர் . பலத்த இரத்தக் காயமடைந்த 8 பேர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தனர். காயமடைந்தவர்கள் அனைவரும் ராம்பனில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு மீட்புப் படையினர் விரைந்து சென்று உயிரிழந்தவர்களையும் , காயமடைந்தவர்களையும் அப்புறப் படுத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். முதல் கட்ட பொலிஸ் விசாரணையில் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் என்றும் டிரைவர் குடிபோதையில் பஸ்ஸைசெலுத்தியதால் இந்தவிபத்துநேர்ந்துள்ளது. என்றும் தெரியவந்துள்ளது.

இதற்கிடையே இந்த விபத்தில் பலத்த காயமடைந்து மிகவும் கவலைக்கிடமான நிலையில் உள்ள 8 பேர் ஜம்முவில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு சிறப்புச் சிகிச்சைக்காக விமானம் மூலம் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும அதிகாரிகள் தெரிவித்தனர். (தி)

# மாவோ. தீவிரவாதிகளிடமிருந்து பாடம் கற்றுக்கொள்ளுங்கள்

## நக்சலைட்டுகளுக்கு இடது சாரி தலைவர்கள் வலியுறுத்து

(புதுடில்லி)

நேபாள மாவோயிஸ்டுக்களைப் போல் இந்தியா வில் உள்ள நக்சலைட் இயக் கங்களும் அரசியல் பாதைக்கு திரும்புவது குறித்து பரிசீலிக்க வேண்டும் என இடது சாரி கட்சிகளின் தலைவர்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர் .

மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் பார்வர்டு பிளாக் கட்சிகளின் மூத்த தலைவர்கள் தனித்தனியாக அளித்த பேட்டியில் இந்த பகிரங்க அழைப்பை விடுத்தனர்.

இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலர் ஏ.பி. பரதன் கூறும் போது மாவோயிஸ்ட் மற்றும் ஏழு கட்சித் கூட்டணிக்கு இடை யே ஏற்பட்ட ஒப்பந்தம் வரலாறு முக்கியத்துவம் வாய்ந்தது.

நேபாளத்தில் நடந்த இந்த நிகழ்வு அரசியலில் பெரிய விளைவு இது காஷ்மீர் முதல் விசாக பட்டினம் வரையிலான அனைத்து நக்சலைட் இயக்கங்களிடமும் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம் என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் தேசிய செயலர் சமீம் பயாஸி துப்பாக்கி மூலம் அதிகாரத்தை கைப் பற்றும் மாவோயிஸ்ட் கொள் கை தவறானது என்பதை பார் லிமென்ட் ஜனநாயகப் பாதைக்கு திரும்புவதன் மூலமாக மாவோயிஸ்ட்டுக்கள் நிரூபித்துள்ளனர்.

நாட்டின் எதிர்கால அமைப்பை வாக்குச் சீட்டு மூல மாக த் தீர்மானிக்கலாம் என்பதை அவர்கள் உணர்ந் துள்ளனர்.

எனவே இந்தியாவில்உள்ள மாவோயிஸ்ட் பிரிவுகளும் தங்களுடைய அரசியல் மற்றும் பாதை குறித்து மறு சிந்தனை செய்ய வேண்டும் . என்றார்.

மார்க்சிஸ்ட் கட்சியின் லோக்சபா துணைத் தலைவர் முகமது சலீம் கூறும் போது செழிப்பான வளர்ச்சியடைந்த ஜனநாயக மதச் சார்பற்ற மற்றும் உறுதி யான நேபாளம் அமைய வேண்டும் என்பதே இடது சாரிகளின் விருப்பம் . மாவோயி ஸ்ட்டுக்களின் உறுதியான முடிவு மக்களுக்கு கிடைத்த வெற்றி . சமூகத்தின் அனைத்து மக்களிடையே அமைதி மற்றும் உறுதித்தன்மை இருந்தால் மட்டுமே மூன்றாம் உலக நாடுகள் வளர்ச்சியை எட்ட முடியும் என்பதற் கு இது ஒரு உதாரணம் . இந்தியாவில் உள்ள மாவோஸ்ட்டுக்கள் நேபாள மாவோயிஸ்டுக்களிடம் இருந்து பாடம் கற்றுக் கொள்ளவே ண்டும். அறிவற்ற முறையிலான கொலை, வெறியில் ஈடுபடக்கூடாது என்றார்.

பார்வர்டு பிளாக் பொதுச் செயலர் பஸ்வாஸ் கூறும் போது நேபாள மாவோஸ்ட்டுக்கள் அரசியல் பாதைக்கு திரும்பி இருப்பது உண் மையான அதிகாரம் மக்களிடம் தான் உள்ளது. துப்பாக்கி குண்டுகளில் அல்ல என்று தெரியப் படுத்தியுள்ளது. இந்த நிகழ்வு மூலமாக நேபாள ம் , இந்தியா மற்றும் உலக நாடுகளில் இடது சாரிகளின் நீண்ட பாதை வலிமை பெறும் என்றார். (க)

## WORLD NEWS உலக தரிசனம்

# டிஸ்கவரி விண்வெளி ஓடம் முதலாம் திகதி விண்வெளிக்கு

(கேப் கேனவரல்)

டிஸ்கவரி விண்வெளி ஓடம் ஜுலை மாதம் முதலாம் திகதி விண்ணில் பறப்பதற்கு அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையம் அனுமதி அளித் துள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையம் நாசா கடந்த 2003 ஆண்டு விண் வெளிக்கு அனுப்பிய கொலம்பியா ஓடம் விபத்துக்குள்ளானதில் அதில் இருந்த இந்திய விண்வெளி வீராங்கனை கல்பானா சாவ்லா உட்பட ஏழு விண்வெளி வீரர்கள் பலியாயினர்.

அதன் பின்னர் கடந்த 2005 ஆம் ஆண்டு ஜுலை மாதம் டிஸ்கவரி விண் வெளி ஓடம் விண்ணில் ஏவப்பட்டது. அப்போது இந்த விண்கலத்தின் எரிபொருள் டாங்கிகள் இருந்த பாதுபாப்பு தகடுகள் கீழே விழுந்தன. இதையடுத்து ஓடத்தில் கூடுதலாக சில மாற்றங்களை செய்வதற்காக விண்வெளி ஓடத்தின் பயணத்தை விஞ்ஞானிகள் ரத்து செய்தனர்.

விண்வெளி ஓடத்தின் எரிபொருள் டாங்கை மறுவடிவமைப்பு செய்ய சிறப்புக் குழு அமைக் கப்பட்டது .

விண் வெளி ஓடத்தில் கூடு தலாக செய்யப்பட்ட சில மாற்றங்கள் முடிவடைந்து அடுத்த மாதம் முதலாம் திகதி டிஸ்கவரி விண் வெளி ஓடத்தை விண்ணிற்கு அனுப்ப நாசா முடிவு செய்துள்ளது.

அதே வேளை, டிஸ்கவரி ஓடத்தை விண்ணில் செலுத்த நாசா மையத்தின் மூத்த பாதுகாப்பு அதிகாரி மற்றும் இன்ஜினியர் ஆகியோர் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

டிஸ்கவரி ஓடம் விண்ணில் செலுத்தப் படுவதற்கு முன் அதில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் போதுமானதா என்பது தொடர்பாக விவாதங்கள் நடந்து வருகிறது.

இந்த நிலையில் நிருபர்களுக்கு பேட்டியளித்த நாசா மையத்தின் நிர்வாகி மைக்கேல் ஓரி பின் டிஸ்கவரி விண்வெளி ஓடம் விண்ணில் செலுத்துவதற்கு முழு தகுதி பெற்றுள்ளதா ? இல்லையா? என்பது பற்றி மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன.

விண்வெளி ஓடத்தை விண்ணில் செலுத்துவது தொடர்பாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்த பரிந்துரைகள் அனைத்தையும் ஏற்க முடியாது. ஓடம் விண்ணில் செலுத்தப்பட வேண்டுமானால் விஞ்ஞானிகளின் இழப்பு அல்லாத வேறு சில அபாயங்களைச் சந்திக் கத்தான் நேரிடும் என்றார். (தி)




உலகக்கிண்ண கால்பந்து போட்டி நடைபெற்றுவரும் வேளையில் எங்கு பார்த்தாலும் பந்துமயமாக இருக்கிறது. நெதர்லாந்தில் உள்ள மிருகக்காட்சிச்சாலையில் உள்ள யாணைக்குட்டிகளுக்கும் விளையாட பந்து வழங்கப்பட்டது.

# வெடிகுண்டு ஆலையில் விபத்து 14 பேர் பலி; 30 பேர் காயம்

(பெய்ஜிங்)

சீனாவிலுள்ள வெடிகுண்டு ஆலையில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர் . 30 பேர் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அன்ஹுப் மாகாணத்தில் கிணறு தோண்டுவது போன்ற வேலைகளுக்கு ப்பயன்படுத்தப்படும் வெடிகுண்டுகள் தயாரிக்கும் தொழிற்சாலை உள்ளது. இதில் கடந்த வெள்ளிக்கிழமை பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது . இதில் இரண்டு மாடிகளைக் கொண்ட அந்த ஆலை தரைமட்டமானது.

விபத்து நடந்த போது ஆலையில் எத்தனைபேர் பணிபுரிந்தனர் என்பது தெரியவில்லை .

இதற்கிடையில் விபத்தில் சிக்கி உயிரிழந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது. விபத்து நடந்த இடத்தில் சிதறிக்கிடக்கும் வெடிபொருட்கள் மீண்டும் வெடிக்கக் கூடும் என்ற அச்சம் நிலவு கிறது. இதனால் மீட்பு ப் பணிகள் கடினமாக உள்ளதாக சீன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (தி)

# 85 தலிபான் தீவிரவாதிகள் ஆப்கனில் சுட்டுக்கொலை

(காபூல்)

ஆப்கனிஸ்தானில் மறு சீரமைப்பு பணிகளில் ஈடுபட்டுவரும் மெரிக்கூட்டு படையினரையும் வெளிநாட்டினரையும் தலிபான் தீவிரவாதிகள் தாக்கி வருகிறார்கள்.

இந்த தீவிரவாதிகளை தடுக்க அமெரிக் க கூட்டு படையினர் தெற்குப்பகுதியில் அதிரடி தாக்குதல் நடத்தினார்கள் .

தெற்குப்பகுதியில் மலை அடி வாரங்களை ஒட்டியுள்ள 4 மாகாணங்களை 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அமெரிக்கப் படையினரும் ஆப்கான் இராணுவமும் சுற்றி வளைத்தது. தீவிரவாதிகளின் முகாம்கள் பதுங்கு குழிகள் ஆயுதக் கிடங்குகள் ஆகிய வற்றை குண்டு வீசி தாக்கியது. 4 நாட்களாக தொடர்ந்து இந்த தாக்குதல் நடைபெற்றது.

இந்த அதிரடி தாக்குதலில் 85 தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். தீவி ரவாதிகளின் வெடிகுண்டு தயாரிப்பு தொழிற்சாலையும் தாக்கப்பட்டது. தலிபான் ஆட்சி அகற்றப்பட்ட பிறகு அமெரிக்க கூட்டணி படைகள் நடத்திய மிகப்பெரிய தாக்குதல் இது.

இதேபோல் பல்வேறு நகரங்களில் போதை பொருள்களுக்கு எதிரான வேட்டையும் நடந்தது இதில் பலகோடி ரூபாய் மதிப்புள்ள போதை பொருட்கள் சிக்கின. (தி)

# பாடசாலை தீ விபத்து 4 மாணவர்கள் பலி!

(காபூல்)

ஆப்கானில் பள்ளி தீ விபத்தின் போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி நான்கு குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்தன

ஆப்கானிஸ்தான் நாட்டின் மேற்குப் பகுதியில்உள்ளது ஹெராத் நகரம். இங்குள்ள மூன்று அடுக்கு கட்டடத்தில் ஆரம்ப பள்ளி ஒன்று செயல்பட்டு வருகிறது இந்த பள்ளியின் சமையல் கூடத்தில் வெள்ளிக் கிழமை திடீரென தீப்பிடித்தது.

அந்தத் தீ அருகில் இருந்த வகுப்பறைக்கு பரவியது . உடன் அங்கிருந்த பள்ளிக்குழந்தைகள் அவசரஅவசரமாக வெளியேறின.

அலறியடித்துக்கொண்டு மாடியிலிருந்து வேகமாக கீழே இறங்கின . ஒருவரை ஒருவர் முண்டியடித்துச் சென்றதில் ஒரு சில குழந்தைகள் கீழே விழுந்தன . இந்த நெரிசலில் சிக்கி நான்குகுழந்தைகள் பலியாயின. மேலும் 15 குழந்தைகள் காயமடைந்தன. அங்கு விரைந்து வந்த தீயணைப்புப் படை யினர் தீயை கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந் தனர். (தி)

> ஒளி விளக்குகள் வைத்திருப்போர் ,மற்றவர்களுக்கு அவற்றை வழங்கிச்செல்வார்களாக.
> -பிளேட்டோ

வலம்புரி

## அமைதி நிலையை ஏற்படுத்த புத்திஜீவிகள் முன்வரவேண்டும்

இலங்கை இன விவகாரம் தொடுவானமாக நீண்டு செல்கிறது.காலங்கள் கடந்து செல்கின்றனவே தவிர தீர்வுகள் எட்டப்படுவதாக இல்லை.

இதற்கான காரணம் தான் என்ன? இந்தக்கேள்வி பொதுமக்களின் மனங்களை பிழிகின்ற போதிலும் விடை கிடைக்கவில்லை.

சிறிய நாடான இலங்கையில் இருக்கக்கூடிய ஒரு சில இனங்கள் தங்களுக்குள் ஒற்றுமையாக வாழமுடியவில்லை. மதம், மொழி என்பவற்றின் பெயரால் நாட்டின் அதிகார உரிமை நிலை நிறுத்தப்படுகின்றது.

இதன் காரணமாக சிறுபான்மையின மக்கள் ஆளும் வர்க்கத்தால் அடிமைப்படுத்தப்படுகின்றனர்.உலக அறிவியல் வளர்ச்சியிலும் அடிமைத்தனசிந்தை விடைபெற்றுச் செல்லவில்லை.

இதனால் சிறுபான்மை இன மக்கள் தொகுதி பெரும்பான்மை இனத்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராக போராட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியது.

உலகின் அனுபவப் பார்வையில் அடக்கப்பட்ட இனங்கள் தொடர்ந்தும் அடங்கிப்போனதாக வரலாறுகள் இல்லை. அடக்கியவர்களுக்கு எதிராக அடங்கியவர்கள் கிளர்ந்தெழுந்த போது அதன் வலிமையை தடுத்து நிறுத்தும் வல்லமை ஆண்ட இனங்களுக்கு இருந்ததும் இல்லை.

இங்குதான் சிறுபான்மை இன மக்கள் உரிமைச் சுதந்திரத்தின் உரித்திற்கு உரியவர்கள் ஆளாகின்றார்கள்.

இந்த வகைமையே ஈழத்தமிழரின் போராட்டத்திற்கும் பொருத்துடையதாகும். உலக வரலாற்றில் இடம் பெற்ற போராட்டங்களுடன் ஒப்பிடும்போது இலங்கை இன விவகாரம் வேறுபட்ட போக்கை கொண்டுள்ளதை அவதானிக்க முடியும்.

அதாவது எந்தவொரு நாடும் தனது அரசியல் எல்லைக்குள் நடக்கின்ற போராட்டத்திற்கு ஒரு தீர்வைக்காண முற்படும். இலங்கையில் அதுதான் இல்லை.

தீர்வுகாண்பதற்காக பேச்சுவார்த்தை இடம்பெறும். ஆனால் தீர்வுத்திட்டம் இருக்க மாட்டாது. தீர்வில்லாமல் -எதனை கொடுக்கப் போகின்றோம் என்ற தெளிவான முடிபில்லாமல் காலம் கடத்துவதனை மட்டுமே இலக்காக்கிக்கொண்டு இலங்கை அரசு இன விவகாரத்தை நகர்த்துகின்றது.

இவ்விதம் காலம் கடத்தும் செயல் உடனடியாக பெரும் தாக்கத்தை ஏற்படுத்தாவிடினும் நீண்டகாலத்தில் பேரழிவையே தரும்.

இவ்வாறு இலங்கை அரசு இனவிவகாரத்தை தட்டிக்கழிப்பதன் பின்னணியில் வெளிநாடுகளின் ஆலோசனைகளும் அழுத்தங்களும் உண்டு என்பது மறுக்கமுடியாத உண்மை.

குறிப்பாக இந்தியாவுக்கு எதிரான போக்குடைய நாடுகள் இலங்கைக்கு தவறான வழிகாட்டுதல்களையே வழங்கி வருகின்றன.

அண்டை நாடான இந்தியாவின் ஆதிக்கம் இலங்கையில் இருப்பதை தடுப்பதும், இலங்கை மீது தாம் ஆதிக்கம் செலுத்துவதன் ஊடாக இந்தியாவின் உபகண்ட வல்லாண்மையைக் குறைப்பதுமே இதன் நோக்கமாகும்.

இவ்விதம் வெளிநாடுகளின் போக்கினால் ஆற்றலையும் இலங்கை இன விவகாரத்தை முடிபுக்குக் கொண்டுவருவதாயின், நாட்டு புத்தி ஜீவிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து உபாயம் அமைக்கவேண்டும்.

# மங்கள சமரவீரவின் உயிருக்கு ஆபத்தா?

# சோதிடம் பார்த்தார் மஹிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் உயிருக்கு ஆபத்து உள்ளதா? அமைச்சர் பதவியை விட வேறு உயர் பதவியை அவர் அடைந்து விடுவாரா என்று மங்களவுக்கு தெரியாமல் இரகசியமாக தனது குடும்ப சோதிடரிடம் மஹிந்த ராஜபக்ஷ கணிப்புக் கேட்டுள்ளதாக கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில வார பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.



அந்த ஆங்கில வார பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

ஜனாதிபதி செயலகத்தில் பல முக்கிய பதவிகளை வகித்து வருபவரும் லாற்றறி சபையின் தலைவர் சஜின் வாஸ் குணவர்த்தனவும், மங்களசமரவீரவுக்காக சோதிடம் பார்க்க காலிக்குச் சென்றுள்ளனர்.

அப்போது மங்களவின் உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும் அவரைப் பாதுகாக்க வேண்டும் என்றும் சோதிடர் கூறியுள்ளனர்.

மங்களவை எப்படிப் பாதுகாக்க முடியும் என்று அவரது இராசியின் அடிப்படைகளில் சொல்லுங்கள் என்று இருவரும் கூறியுள்ளனர். இதனால் சோதிடர் எரிச்சலடைந்துள்ளார். மஹிந்த ராஜபக்ஷ என்னிடம் மாதம் ஒரு முறை பேசுவார் அவரால் இதைச் செய்ய முடியாதா? என்று கூறியுள்ளார்.

மஹிந்தவுக்கு நிறைய பணிகள் உள்ளன. அதனால் மங்களவின் பாதுகாப்பு குறித்து விசாரித்து வர எங்களை இரகசியமாக அனுப்பியுள்ளார் என்று இரு அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டு நவம்பர் 6ஆம் திகதி வரை மங்கள சமரவீரவுக்கு கெட்ட காலம் என்றும் 2007ஆம் ஆண்டுமே மாதத்துக்குப் பின்னர் சக்தி வாய்ந்த பதவி ஒன்று மங்களவுக்கு கிடைக்கும் என்றும் சோதிடர் கணித்துக் கூறியுள்ளார்.

மங்கள சமரவீர உயிராபத்து குறித்து மஹிந்த ராஜபக்ஷவை அச்சம் கொள்ளச் செய்யவேண்டாம் என்று கூறுமாறும் இருப்பினும் நவம் பர் 6ஆம் திகதி வரை கவனமாக இருக்குமாறு அறி வுறுத்துமாறும் சோதிடர் மேலும் தெரிவித்துள்ளார்.



அத்துடன் சோதிடரை விட்டுவைக்காத இரு அதிகாரிகளும் அமைச்சர் பொறுப்புக்கு அப்பால் மங்கள உயர்நிலை அடைந்து விடுவாரா என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மங்களவின் சாதகத்தை முழுமையாக படிக்க 3 நாட்கள் தேவை. ஆனால் அமைச்சர் பதவியை விட உயர் பதவியை அவர் அடைவார் எனத் தெரிகிறது என்றும் சோதிடர் கூறியுள் ளார்.

இந்த விடயம் இருவாரங்களுக்கு முன்னதாக மங்கள சமரவீரவுக்கு சென்றடைந்துள்ளது. அதே நேரத்தில் மஹிந்தவும் மங்கள சமரவீரவின் நிகழ்ச்சிகளை ஊடகங்களில் வெளியிடுவதை குறைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார். (க)

## கடற்படையினர் துப்பாக்கிச் சூடு; தமிழக மீனவரொருவர் படுகாயம்

கச்சதீவு அருகே இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒரு மீனவர் படு காயம் அடைந்தார். பல படகுகள் துப்பாக்கிச் சூட்டில் சேத மடைந்தன.

இராமேஸ்வரத்திலிருந்து நேற்று முன்தினம் மாலை 200க்கும் மேற்பட்ட படகுகளில் மீனவர்கள் கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்றனர்.

கச்சதீவு அருகே அவர்கள் நள்ளிரவில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அங்கு திடீரென இலங்கை கடற்படையினர் சென்றனர். தமிழக மீனவர்களை முற்றுகையிட்ட அவர்கள் எந்தவித எச்சரிக்கையும் வழங்காமல் சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் பல படகுகள் சேதமடைந்து கடலில் மூழ்கின ஒரு மீனவர் படுகாயம் அடைந்தார்.

இதையடுத்து தமிழக மீனவர்கள் ஒருவாறு அங்கிருந்து தப்பி கரைக்குச்சென்றனர். காயமடைந்த மீனவருக்கு இராமேஸ் வரம் அரச மருத்துவமனையில் சிகிச்சை கொடுத்த பின்னர் மேல் சிகிச்சைக்காக அவரை மதுரை அரசு ராஜாஜி மருத்து வமனைக்கு கொண்டு சென்று சேர்த்துள்ளனர்.

இலங்கை கடற்படையினரின் இந்த வெறித் தாக்குதலால் இராமேஸ்வரம் மீனவர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. (க)

## பேசாலை தேவாலயத் தாக்குதல் விசாரணைக்கு அரசாங்கம் உத்தரவு

(மன்னார்)

மன்னார் பேசாலை தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த அகதிகள் மீது கடற்படையினர்நடத்திய தாக்குதல் குறித்து விசாரணை நடத்த அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பில் தேசிய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

அரசாங்கம் மற்றும் அரச படைகளின் நன்மதிப்பை சீர்குலைக்கும் வகையில் புலிகளுக்கு ஆதரவான ஊடகங்கள் சில தேவாலயம் மீது கடற்படை தாக்குதல் நடத்தியதாக செய்திகள் வெளியிட்டுள்ளன.

தேவாலயப்பகுதியில் அமைந்துள்ள இராணுவ நிலைகள் மீது தமிழீழ விடுதலைப் புலிகளே இரு மணித்தியாலங்களுக்கு மேலாக தாக்குதல் நடத்தினர்.

கடல்மற்றும் தரைப்பகுதியிலிருந்து விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில்தான் மக்கள் படுகாயமடைந்தனர். இச்சம்பவம் தொடர்பில் முழு விசாரணைக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை கடற்படை பேச்சாளர் டி. கே. பி.தசநாயக்க இது பற்றிக் கூறுகையில் தரைப்பகுதியில் ஒரு துப்பாக்கிச் சூட்டைக்கூட கடற்படையினர் நடத்தவில்லை என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களது படகுகளில் 127மி.மீ துப்பாக்கிகள் பொருத்தியுள்ளதாக வும் அது ஆயிரம் முதல் ஆயிரத்து 500 மீற்றர் தூரம் வரை தாக்கக் கூடியது என்றும் அவர் கூறினார். (க)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்கத்தின் 7ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் தலைவர் இ. இரத்தினசிங்கம் தலைமையில் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ், யாழ்.மாநகர ஆணையாளர் சீ.வீ.கந்தையா சிவஞானம், பிராந்திய ஆணையாளர் திருமதி ப. சிவலிங்கம், வடமராட்சி சுருக்கெழுத்து கழகச் செயலாளர் கே. வி. சிவச் சந்திரதேவன், முன்னாள் தலைவர் ரி.கே. இராஜேந்திரராவ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (க)

## யாழில் 6 மாத காலப் பகுதியில் 140 பேர் காணாமல் போயுள்ளனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்த டிசம்பர் மாதம் முதல் கடந்த வாரம் வரை 140 க்கும் அதிகமான இளைஞர், யுவதிகள் காணாமற் போயுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ் . அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் 30 பேர் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போயுள்ளனர். ஏனைய 110 பேரில் சிலர் வன்னிக்கு சென்றதாக தகவல் கிடைத்துள்ளது. பலரை படையினர் கைது செய்ததாக அவர்களின் உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர் . ஆனால் அவற்றை உறுதிப்படுத்த முடியா திருக்கின்றது என்றும் அந்த அதிகாரி கூறினார்.

இதனிடையே இவ்வாறு காணாமற் போனதாக முறைப்பாடு செய்யப்பட்ட இருவரே கோப்பாய் தரவை பகுதியில் சடலமாக மீட்கப்பட்டனர். மீட்கப்பட்ட மேலும் இரு சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-7)

## சு.கட்சித்தலைவர் பதவியிலிருந்து சந்திரிகா குமாரதுங்கா விலகுவார்?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சித் தலைவர் பதவியிலிருந்து சந்திரிகா குமாரதுங்கா விலகக்கூடும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் 29ஆம் திகதி தனது 61 ஆவது பிறந்த நாளை லண்டனில் கொண்டாடும் சந்திரிகா குமாரதுங்கா அதே நாளில் கட்சித் தலைவர் பதவியிலிருந்தும் விலகவுள்ளதாக கூறப்படுகிறது.


சந்திரிகாவின் பிறந்த நாளுக்கு முன்னதாக 28ஆம் திகதி சுதந்திரக்கட்சியின் மத்தியக்குழு கூட்டம் நடைபெற வுள்ளது . கட்சியின் தலைமைப்பதவி தொடர்பான கட்சியின் யாப்பில் அக் கூட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவுள்ளவரே கட்சியின் தலைவராக நீடிக்க வேண்டும் என்று சுதந்திரக் கட்சியின் யாப்பில் திருத்தம் செய்யப்படவுள்ளதாகவும் அதையடுத்து மஹிந்த ராஜபக்ஷவை கட்சித் தலைவராகவும் சந்திரிகாவை கட்சியின் மூத்த ஆலோசகராகவும் நியமிக்கவும் சுதந்திரக்கட்சியினர் முடிவு செய்துள்ளனர்.



சுதந்திரக்கட்சியின் மத்தியக் குழுக் கூட்டம் தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை சந்திரிகாவின் செயலாளரிடம் கடிதம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஆனால் சந்திரிகாவின் ஆதரவாளர்கள் கட்சியின் இந்த யாப்பு திருத்தத்தை கடுமையாக எதிர்த்து வருகின்றனர். (க)

### தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



முதலில் நீங்கள் உங்கள் மனதைத் தயார் செய்து கொள்ள வேண்டும். அதன்பிறகு எந்தக் குறிப்பிட்ட விடயத்தில் நீங்கள் கவனத்துடன் கருத்தைச் செலுத்தினாலும் அதன் பொருள் தானாகவே தெளிவாகப் புலப்படும்.


மணலாற்றுக் காட்டுப் பகுதியில் விடுதலைப்புலிகளின் தாக்குதலில் பலியான இராணுவத்தினரையும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் அவர்களின் சடலங்களை விடுதலைப்புலிகள் ஒப்படைப்பதையும் படங்களில் காணலாம்.

# நோர்வே அனுசரணையாளர்கள் நடுநிலையுடன் செயற்பட வேண்டும்

## மங்கள சமரவீர லண்டனில் உரை

(லண்டன்)

தடம்புரண்டு போயிருக்கும் சமாதான செயற்பாடுகளில் அனுசரணையாளராக பணியாற்றும்போது நோர்வேயானது முழு இலங்கையினதும் உணர்வுகள் பற்றி கணக்கில் எடுத்துக் கொள்ளுதல் அவசியம் என்று வெளியுறவு அமைச்சர் மங்களசமரவீர லண்டனில் தெரிவித்தார்.

நோர்வே தனது அனுசரணைப்பணியின் போது இலங்கையின் ஒரு பிரிவு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதை விடுத்து முழு இலங்கை மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து செயற்பட வேண்டும் என்றார்.

பத்து நாட்கள் லண்டனில் நடைபெறவுள்ள இலங்கையின் கலை கலாசார விழாவின் தொடக்க நாளில் பேசும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சமரவீர லண்டனில் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள்பற்றி கலந்துரையாடுவார். அதில் சமாதானசெயற்பாடுகள்பற்றியவிடயமும் அடங்கும் என அவர் தெரிவித்தார். (ச-6,5)

# இளைஞனை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு சென்ற ஒருவரைக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

அத்தியடி புதுவீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கார்த்திகேசு கனகலிங்கம் (வயது-35) என்ற இளைஞனையே காணவில்லை என்று அவரது தாயார் நேற்று மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளார்.

இவர் கடந்த 05 ஆம் திகதி வவுனியா நோக்கிப் புறப்பட்டார் என்றும் அவரை இராணுவத்தினர் இரு முறை வீட்டிற்கு வந்து தேடியதாகவும் தாயார் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ச-15,133)

# ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி, வடமராட்சிப் பிரதேச இந்து அறநெறிப்பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்கள் அனைவரையும் இன்று காலை 10.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவ்வொன்று கூடலில் இந்து அறநெறிப் பாடசாலைகளுக்கான உபகரணங்கள் வழங்கல் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதாக தென்மராட்சி பிரதேச இந்து கலாசார அபிவிருத்தி உதவியாணையாளர் செல்வி சீ.மகிந்தினி தெரிவித்துள்ளார். (ச)

# பிரான்ஸ் வாழ் தமிழ் மக்களால் 37 நாட்களுக்கு உண்ணாவிரதம்

பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்களால் நேற்று முதல் 37 நாட்கள் சுழற்சி முறையிலான அடையாள உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழீழத் தாயகத்தில் தமிழ் மக்கள்மீது நடாத்தப்படும் கொலைகளை அனைத்துலக சமூகத்தின் கவனத்திற்கு கொண்டுவரும் நோக்கிலும் விடுதலைப்புலிகள்மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைக்கு ஆட்சேபம் தெரிவித்தும் ஆரம்பிக்கப்பட்டுள்ள உண்ணாவிரத கவனயீர்ப்புப் போராட்டம் சுழற்சி முறையில் நடைபெறவுள்ளது.

காலை 10.15 மணியளவில் தலைநகர் பரிஸில் உள்ள ஈபில் கோபுரத்திற்கு அருகாமையில் தமிழீழத் தேசியக் கொடியும் பிரான்ஸ் நாட்டுத் தேசியக் கொடியும் ஏற்றப்பட்டு அடையாள கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் தமிழீழ மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் குறித்து பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் யூலியா அவர்கள் பிரன்சு மொழியில் உருக்கமான உரை வழங்கினார்.

அதேநேரம் பிரான்ஸ் தமிழ்ப் பெண்கள் அமைப்பினர் பாரிஸ் நகரில் உள்ள மருத்துவமனையில் இரத்ததானம் செய்துள்ளனர்.

உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டுள்ள தமிழீழ மக்கள், படையினரின் படுகொலைகளைத் தெரிவிக்கும் பதாகைகளை தாங்கியவாறு தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதோடு பிரான்ஸ் மக்கள் மத்தியில் துண்டுப் பிரசுரத்தினையும் வழங்கியுள்ளனர். (ச-5)

# விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட 16 ஆம் அணி மாணவர்களுக்கான அவசர விசேட கலந்துரையாடல் நாளை காலை 9 மணிக்கு விவசாய பீட பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு விவசாய பீட மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.குகானந்தன் கேட்டுள்ளார். (ச)

# அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தில் ஒரு தொகை அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு வைத்தியசாலையின் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்களை தகுந்த ஆதாரம் காட்டி யாழ். போதனா வைத்தியசாலையின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஆறுமுகம் துரைராசா (புதுமடம், உடுவில் தெற்கு, மானிப்பாய்), கண்ணம்மா மகேசன் (காட்டுப்புலம், கரவெட்டி கிழக்கு), சின்னப்பிள்ளை செல்வராசா (காட்டுப்புலம், கரவெட்டி கிழக்கு), ஜெயச்செல்வம் ராஷ்கலா (மாமுனை, செம்பியன்பற்று), அன்னராசா ஜெயச்செல்வம் (ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை), அன்னம்மா மயில்வாகனம் (சிறுப்பிட்டி மேற்கு), மின்னல்கொடி கிருஷ்ணன்(காரைநகர் கிழக்கு), கதிரேசு சறோஜா தேவி(நெடுந்தீவு-5), செல்வராணி அப்புத்துரை(தாவடி தெற்கு, கொக்குவில்) ஆகியோரது அடையாள அட்டைகள் தவறவிடப்பட்டுள்ளன. (க)

## மணலாற்றில்...

வரும் கொல்லப்பட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் இராணுவத்தினரது இரு சடலங்களும் ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. ரி-56 01 ரக துப்பாக்கி-1, ரி-56 02 ரக துப்பாக்கி 2, கைக்குண்டுகள் 4, ரவைக்கூடுகள் 10 தண்ணீர் கான்கள் 2, ரவைக்கூடு தாங்கிகள் 3 ஆகியவையே கைப்பற்றப்பட்டதாக புலிகள் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட இராணுவத்தினரது இரு சடலங்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ச-5)

## மீண்டும்...

தணிக்க ஒரேவழி. அரசாங்கம் ஒப்புக் கொண்டபடி துணை இராணுவக்குழுக்களினது ஆயுதங்கள் களைப்படவேண்டும். அரசாங்கம் மற்றும் சிங்கள தரப்புடன் பேச்சுக்களை நடத்தி தமிழ் மக்களின் அபிலாசைகளையும் உரிமைகளையும் வென்றெடுக்கவே நாம் முயற்சிக்கின்றோம்.

ஆனால் இவை நிராகரிக்கப்பட்டு தமிழ் மக்கள் மீது மற்றொரு போர் திணிக்கப்பட்டால் நாம் ஒரு உறுதியான நிலைப்பாட்டிற்கு செல்ல நேரிடும் என்றார் சு.ப.தமிழ்ச்செல்வன். (ச-5)

## நெல்லியடியில்...

தாக்குதலில் சிக்கி மணிகலாதன் பிரகலாதன் (வயது 37) என்பவர் படுகாயமடைந்தார். இவர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-15,101,133)

## இலங்கை விடயத்தில் தலையிடுமாறு...

தி.மு.க. கூட்டணியின் கட்சிகளின் கூட்டம் தி.மு.க. தலைமையகமான அறிவாலயத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தின்போது நிறைவேற்றப்பட்ட விடயங்கள் வருமாறு;

இலங்கையில் நோர்வே நாடு ஈடுபட்டு நடத்திய அமைதிப் பேச்சுவார்த்தை சுமுகமாக முடிந்த அங்கே அந்த மக்களுக்கான வளர்ச்சிப் பணிகளை இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் அக்கறை காட்டுவார்கள் என்ற எதிர்பார்ப்பு நிறைவேறாமல் மீண்டும் இரு சாராரும் மோதிக் கொள்ளும்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் அந்நாட்டு அப்பாவி மக்கள் கண்ணி வெடிகளாலும் விமானத் தாக்குதல்களாலும் கொல்லப்படும் சம்பவங்களும் அதன் விளைவாக தமிழ் நாட்டை நோக்கி அகதிகள் வந்து குவிவதும் இந்தியா - இலங்கை இரண்டுக்கும் இடையில் வாழுகின்ற மக்களின் மனது பெரிதும் பாதிக்கும் அளவிற்கு அமைந்துள்ளது.

இந்தப் பிரச்சினை ஏற்கனவே விரும்பத்தகாத, பல விபரீத , வேதனையான நிகழ்வுகளுக்குக் காரணமாக அமைந்ததையும் ஆழமாக எண்ணிப்பார்த்து இலங்கையில் அமைதிக்கு வழிகாண இந்திய அரசு ஆவன செய்திட வேண்டும் என்ற அடிப்படையில் கையொப்பம் இட்டுள்ள இயக்கங்களைச் சார்ந்த நாங்கள் மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ் நாட்டு மீனவர்களுக்கு இலங்கை இராணுவத்தால் தொடர்ந்தும் இழைக்கப்படும் கொடுமைகள் நிறுத்தப்படவும் அந்த மீனவர்களுக்கு உயிர், உடைமை , உரிமை உத்தரவாதம் அளிக்கப்படவும் இந்திய - இலங்கை அரசுகள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றோம் என்று அத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி, காங்கிரஸ் கட்சி சுதர்ஷனம், பாட்டாளி மக்கள் கட்சி மருத்துவர் இராமதாஸ், திராவிடக் கழகம் வீரமணி,

மார்க்சிஸ்ட் கட்சி டி.கே. ரங்கராஜன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி த.பாண்டியன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் காதர் மொய்தீன் ஆகியோர் இத் தீர்மானத்தின் கீழ் கையொப்பம் இட்டுள்ளனர். (ச-5)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.06.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.